குழந்தைகள் பத்திரிகை
23-11-75
60 காசு

கோகுலம்



கோகுலம்

மலர் 4 ✻ இதழ் 17
நவம்பர் 23, 1975
ராட்சஸ. கார்த்திகை 7

சந்தா விகிதம்
இந்தியா

ஒரு வருடம்	ரூ. 15.00
ஆறு மாதம்	ரூ. 7.50

இதர வெளிநாடுகள்

ஒரு வருடம்	ரூ. 33.00
ஆறு மாதம்	ரூ. 16.50



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்.


தையலும் தையலும்!

பெண்களுக்குத் 'தையல்' என்று ஒரு பெயருண்டு. தையல் வேலையில் அதிக ஆர்வமும் திறமையும் காட்டுபவர்கள் பெண்கள்தானே? பெண் குழந்தைகளுக்கு ஏற்றதும், அவர்கள் திறமையை வளர்ப்பதுமான சில விளையாட்டுக்களை இங்கு கூறப் போகிறேன். முதலில் பித்தான் தைக்கும் விளையாட்டு. வீட்டில் அப்பா, அண்ணா ஆபீசுக்குக் கிளம்பும் சமயத்தில் சலவையை எடுத்துப் பிரிக்கும் போது ஆடைகளில் பித்தான் இல்லாதிருப்பதைப் பார்த்து எரிந்து விழுவார்கள்; அவசரப்படுவார்கள், புதிய பித்தான் உடனே தைக்க வேண்டுமென்று. அந்த வேளையில் உங்களுக்குப் பித்தான் தைக்கத் தெரிந்திருந்தால் அதுவும் விரைவாகத் தைக்கும் லாகவம் இருக்குமானால் அவர்கள் எத்தனை சந்தோஷப்படுவார்கள்? அதற்குத் தேர்ச்சி பெற இந்த விளையாட்டு உங்களுக்கு உதவும்.

இரண்டு கட்சிகளாகப் பிரிந்து கொள்ளுங்கள். ஒரு வரிசைக்கு ஐந்து பேராவது இருந்தால் இந்த விளையாட்டு சுவாரசியமாக இருக்கும். எதிர் எதிராக ஒருவரை ஒருவர் பார்த்தபடி இரு கட்சிகளும் வரிசையாக உட்கார்ந்து கொள்ளுங்கள். ஒவ்வொருவரிடமும் ஒரு பித்தான் இருக்கட்டும். ஒவ்வொரு கட்சியிலும் அந்தக் கட்சியிலுள்ள முதல் நபரிடம் ஒரு பெரிய துணியும் ஊசியும் நூலும் இருக்கட்டும். இனி விளையாட்டை ஆரம்பிக்கலாம் என்று உத்தரவு கிடைத்ததும் ஒவ்வொரு வரிசையிலுமுள்ள முதல் நபர் தங்களிடமுள்ள ஊசியில் நூலைக் கோத்துத் துணியில் பித்தானைப் பொருத்தித் தைக்க வேண்டும். தையற்காரர்சட்டைக்குப்பித்தான் தைப்பதைப் போலவே உறுதியாகப் பித்தானைத் துணியில் தைத்தானதும் நூலை முடியிட்டு அறுத்து, ஊசியிலிருந்து உருவி விட்டு, தன் வரிசையிலுள்ள அடுத்த நபரிடம் ஊசி, நூல், பித்தான் வைத்த துணி ஆகியவைகளைத் தர வேண்டும். மாற்றுக் கட்சிக்காரரும் இதே போலத்தான் தைத்த பிறகு தனக்கு அடுத்துள்ளவரிடம் அதைத் தர வேண்டும். அடுத்தவர் முன்னவரைப் போலவே ஊசியில் நூலைக் கோத்து அதே துணியில் தன்னிடமுள்ள பித்தானை வைத்துத் தைக்க வேண்டும். இப்படியே வரிசையிலுள்ள கடைசி நபர் வரை துணி கை மாறிப் பித்தான்களும் தைக்கப்பட வேண்டும். எந்தக் கட்சி தன்னுடைய எல்லாப் பித்தான்களையும் முதலில் தைத்து முடிக்கிறதோ அதுவே வெற்றி பெற்றது. இதன் பிறகு ஆட்டத் தலைவர், யார் யார் பித்தான்களை முறைப்படி, வலுவாக, அழகாகத் தைத்திருக்கிறார்கள் என்பதைச் சோதித்து மார்க் வழங்குவார்.

'அதுசரி, பித்தான் தைக்கத் தெரிந்தவர்கள் தானே இந்த விளையாட்டில் கலந்து கொள்ள முடியும்?' என்று கேட்கிறீர்களா? கவலைப்பட வேண்டாம். பித்தான் வைத்துத் தைப்பது அப்படியொன்றும் பெரிய வித்தையல்ல. இந்தப் பகுதியில் விரைவிலேயே சுலபமான எளிய தையல் பாடங்களை உங்களுக்குச் சொல்லித் தரப் போகிறேனே!

— எம். சாந்தா





அறநெறி

குகன்

மனிதர்களைப் புனிதமாக்கும் புண்ணிய நதி கங்கை. அது பகீரதனுடைய அரிய பெரிய தவத்தால் விண்ணிலிருந்து இறங்கி மண்ணுக்கு வந்தது. தரிசித்தாலும் பரம பவித்திரமான நதி.

இந்தக் கங்கைக் கரையில் ஓர் அந்தண முனிவர் இலைக் குடிலில் இருந்து தவம் செய்து கொண்டிருந்தார். அவருக்கு ஒரு புதல்வன். ஏழாண்டு நிரம்பியவன். வேதங்களை ஓதி வந்தான். அன்பும் பண்பும் அடக்கமும் ஒழுக்கமும் உடைய உத்தமச் சிறுவன்.

ஒரு நாள் மைந்தன் தந்தையை நோக்கி, ''அப்பா! தெய்வங்களுக்குள் சிறந்த தெய்வம் எது?'' என்று கேட்டான்.

''மகனே! நமது உடம்பின் உச்சியில் இருப்பது சிகை. வேதங்களில் முடிந்த முடிவாக உள்ள உபநிடதம் அதர்வ சிகை. அதுபோல் தெய்வங்களின் தனிப் பெருந் தலைவர் முருகவேள். அதனால் அப் பெருமான் தெய்வசிகாமணி எனப் பேர் பெற்றான். ''சுக்குக்கு மிஞ்சிய வைத்தியமில்லை, சுப்ரமண்ய சுவாமிக்கு மிஞ்சிய தெய்வமில்லை.

''முருகன் மூவர் தேவாதிகள் போற்றும் முழுமுதற் கடவுள். மறையாயிரங்களும் போற்றும் மகாதேவன். முருகனை வணங்கினால் எல்லா மூர்த்திகளையும் வணங்கியதாகும். அவன் கருணைக் கடல். குணநிதி. முருகனை வழிபாடு செய்தோர், பிறவிப் பெருங்கடலைக் கடப்பார். முத்தி நலம் பெறுவர்'' என்று முனிவர் பெருமான் மொழிந்தார்.

ஒரு சமயம் முருகப் பெருமான் கேதாரம் சென்றார். முனி மைந்தன் ஆச்சிரமத்தில் இருந்து முருகன் திருவடியைச் சிந்தித்து வந்தித்துக் கொண்டிருந்தான்.

ஒரு மன்னன் வேட்டையாடி வந்தான். ஒரு விலங்கின் மீது வைத்த குறி தவறி அம்பு ஒரு முனிவரை மாய்த்து விட்டது. அதனால் பிரமஹத்தி பிடிக்க வருந்தி அதற்குப் பரிகாரம் பெறும் பொருட்டுக் கங்கைக் கரையில் உள்ள இந்த ஆசிரமத்தை யடைந்தான். முனிவர் இல்லாமையால் மன வருத்தத்துடன் திரும்பினான். அப்போது முனி மைந்தன் மன்னனைப் பார்த்துக் கூறுகின்றான்:

''வேந்தனே! நீர் என்ன காரணமாக வந்தீர்? எமக்கு என்ன கவலை? என்னைச் சிறுவன் என்று எண்ண வேண்டாம்.''

''ஓர் இருள் சூழ்ந்த வீட்டில் ஒரு சிறுவன் விளக்கை எடுத்துக் கொண்டு சென்றால் இருள் போகுந்தானே? சிறு பையன் தானே என்று இருள் அலட்சியமாக எண்ணுமா? விளக்கு தானே முக்கியம்? அதுபோல் நான் சிறுவனாக இருப்பினும் என்னிடம் ஞான தீபம் இருக்கிறது. உமது அறியாமையாகிய இருளையகற்றுவேன்'' என்றான்.

மன்னன் மகிழ்ந்து ''குழந்தாய்! நான் இந்த நாட்டையாளும் மன்னன். வேட்டையாடிய போது குறி தவறிப் பாணம் ஒரு முனிவரைக் கொன்று விட்டது. பிரமஹத்தி தொடர்ந்து என்னை வருத்துகின்றது. இதற்கு நிவாரணத்தை நாடி வந்தேன்'' என்றான்.

முனி மகன், ''வேந்தர் பெருமானே! இவ்வளவுதானே? இது சிறிய விஷயம்.



கவலைப்படாதீர். நீர் இந்தப் புனிதமான கங்கையில் முழுகி, வடதிசை நோக்கி நின்று, உருகிய உள்ளத்துடனும் ஒருமைப்பாட்டுடனும் ''ஓம்—முருகா'' என்று மூன்று முறை கூறும். பிரம ஹத்தியகலும்'' என்று மொழிந்தான்.

அவ்வாறே அம்மன்னன் செய்து பிரமஹத்தி நீங்கப்பெற்று, முனிமைந்தனைப் பணிந்து வினை தணிந்து தன்னகரம் சேர்ந்தான். .

சில தினங்களுக்குப்பின் யாத்திரையை முடித்து முனிவர் வந்தார். தந்தையை மைந்தன் பணிந்தான். அருந்தவ முனிவர் மகனைத் தழுவி ஆசி கூறினார். ''மகனே! இங்கே தேர்ச் சக்கரத்தின் சுவடு காணப்பெறுகின்றதே. இங்கு யார் வந்தது?'' என்று கேட்டார்.

''அப்பா! ஒரு மன்னன் பிரமஹத்தியின் நீக்கம் கருதித் தங்களைக் காண வந்தான். அதற்குரிய நிவாரணத்தைக் கூறினேன். அவன் நான் கூறியபடி செய்து பாவம் நீங்கித் துயரம் தொலைந்து சென்றான்.''

தந்தை பெரிதும் மகிழ்ந்தார். ''மகனே! வந்தவருக்கு ஆறுதல் கூறி உதவி செய்தனையே, இதுதான் பண்பாடு. நீ என்ன பரிகாரம் கூறினாய்?''


''தந்தையே! பிரமஹத்தி விலக, கங்கையில் முழுகி, ஒருமைப்பட்ட உள்ளத்துடன் உருகிய மனத்துடன், அன்பு மயமாகி, ''ஓம் முருகா!'' என்று மும்முறை கூறும் என்றேன். அது போல் அம்மன்னர் மும்முறை 'முருகா முருகா! முருகா!' என்று மொழிந்து பிரமஹத்தி அழிந்து, துன்பம் ஒழிந்து சுகம் பெற்றுச் சென்றார்'' என்று கூறினான்.

இதைக் கேட்ட முனிவருக்குச் சீற்றம் பொங்கி எழுந்தது. ''மூடனே! நீ என் மகனா? உனக்கு முருகன் பெருமை தெரியவில்லையே! என்ன காரியம் செய்தாய்? ஒருமுறை முருகா என்றால் ஆயிரம் பிரமஹத்திகள் அகலுமே? ஒரு பிரமஹத்தி விலக மூன்று முறை முருகா என்று மொழியுமாறு கூறினாயே? இது முறையோ? நீ முருக மந்திரத்தின் பெருமையை நன்கு உணர்ந்தாயில்லை. ஆதலால் நீ வேடனாகப் பிறப்பாயாக'' என்று சபித்தார்.

மைந்தன் நொந்து பிதாவைப் பல முறை பணிந்து பிழையைப் பொறுக்குமாறு வேண்டினான். முனிவர் சினம் தணிந்து, ''மகனே! நீ கங்கைக் கரையில் பிறப்பாய். வேடனாகப் பிறந்தாலும் முருகன் நாமமாகிய குகன் என்ற பேருடன் விளங்குவாய். நற்குணசீலனாக இருப்பாய். இராமபிரானுக்கு நண்பனாகும் நலம் பெறுவாய்'' என்று கூறி அருள் புரிந்தார்.

அந்த முனி மைந்தனே, கங்கைக் கரையில் சிருங்கபேரம் என்ற ஊரில் வேடனாகப் பிறந்து குகன் என்ற பேருடன் விளங்கி, இராமச்சந்திர மூர்த்திக்குத் தோழனாகி உயர்வு பெற்றான்.





சாந்திக்குப் பிறந்த நாள்

ஜெயவண்ணன்

காலை மணி எட்டு இருக்கும்.

காவல் நிலையத்தின் முன் சைக்கிளை நிறுத்திய குமார் உள்ளே நுழைந்தான்.

''குட்மார்னிங் மாமா!''

''குட் மார்னிங்...'' என்ற இன்ஸ்பெக்டர் நல்லதம்பி நிமிர்ந்து பார்த்தார். பின், ''அடடே.. குமாரா? வா...வா...'' என்று அவனை மகிழ்வோடு வரவேற்றார்.

''இப்படி உட்கார்'' என்று எதிரே இருந்த நாற்காலியைச் சுட்டிக் காட்டியவர், ''ஏதாவது விசேஷம் உண்டா?'' என்று கேட்டார்.

நாற்காலியில் அமர்ந்த குமார், ''ஆமாம், மாமா! இன்றைக்கு என் தங்கை சாந்திக்குப் பிறந்த நாள். அப்பா உங்களை மத்தியானம் சாப்பாட்டுக்கு வரச் சொன்னார்'' என்றான்.

''அப்படியா? நிச்சயம் வருகிறேன்'' என்று அவர் கூறிக் கொண்டிருக்கும் போதே தொலைபேசியின் மணி அடித்தது.

''ஹலோ...!'' என்ற நல்லதம்பி, ''அப்படியா? இதோ வருகிறேன்... அந்த அறையினுள் யாரையும் போக விடவேண்டாம்'' என்று கூறிவிட்டுத் தொலைபேசியை வைத்தார். பின், ''ஏகாம்பரம், ஜீப்பைத் தயார்பண்ணு'' என்று கூறிவிட்டு மேஜையின் மேல் இருந்த தொப்பியை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டார். பிரம்பைக் கையில் எடுத்துக் கொண்டார். கைத் துப்பாக்கியை எடுத்து இடையில் செருகிக் கொண்டார்.

''மாமா!'' என்ற குமார் எதையோ சொல்லத் தயங்கினான்.

''என்ன குமார்?'' என்று கேட்டார் நல்லதம்பி.

''ஒன்றுமில்லை. இன்றைக்கு எனக்கு லீவுதானே. பொழுது போகவில்லை. நானும் உங்களோடு ஜீப்பில் வருகிறேனே!'' என்றான் குமார்.

அவன் சொன்னதைக் கேட்டு ஒரு கணம் தயங்கிய இன்ஸ்பெக்டர் நல்லதம்பி, பின், .''சரி, வா'' என்றார்.

வெளியே ஜீப் உறுமும் ஓசை கேட்டது.

''ஏட்டு மாமா என் சைக்கிளை எடுத்து உள்ளே வைக்கச் சொல்லுங்க. திரும்பி வந்து எடுத்துக்கிறேன்'' என்று ஏட்டு ஏகாம்பரத்திடம் கூறினான் குமார்.

''சரி தம்பி!'' என்ற ஏகாம்பரம் அருகே நின்று கொண்டிருந்த கான்ஸ்டபிளிடம் கண் ஜாடையால் கட்டளையிட்டார்.

இன்ஸ்பெக்டர் நல்ல தம்பி, குமார், ஏட்டு ஏகாம்பரம் மூவரும் ஜீப்பில் ஏறிக்கொண்டனர். இன்னொரு கான்ஸ்டபிள் டிரைவர் இடத்தில் வந்து அமர்ந்து ஜீப்பை 'ஸ்டார்ட்' செய்தார்.

ஜீப் புறப்பட்டது.

குமாரின் அப்பா தாமோதரனும் நல்லதம்பியும் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள், நெருங்கிய நண்பர்கள். சமீபத்தில்தான் நல்லதம்பி அந்த ஊருக்கு மாற்றலாகி வந்திருந்தார். இன்னும் குடும்பத்தை அழைத்து வர வில்லை. விசேஷ நாட்களில் நல்ல

தம்பிக்குத் தாமோதரன் வீட்டில் தான் சாப்பாடு. முன்னதாகவே அழைப்பதற்காகக் குமார் வந்துவிடு வான்.

ஜீப் ஒரு மாடியின் வீட்டின் முன் சிறு குலுக்கலுடன் நின்றது. மூன்று பேரும் இறங்கி உள்ளே சென்றனர்.

ஹாலில் நுழைந்ததும் ''வாங்க, இன்ஸ்பெக்டர்...'' என்று அவரை வர வேற்றாள் கோமதி — அந்த வீட்டுச் சொந்தக்காரரான பொன்னம்பலத் தின் மனைவி.

பொன்னம்பலம் அந்த ஊரில் குறிப் பிடத்தகுந்த ஒரு செல்வந்தர்.

''என்ன நடந்தது?'' என்று கேட் டார் இன்ஸ்பெக்டர்.

''மாடியில் என் கணவரின் தனி அறை இருக்கிறது. அந்த அறையில் உள்ள இரும்புப் பெட்டியில்தான் பணம், நகைகளை வைத்துப் பூட்டி யிருந்தார். அந்த அறைக்குள் யாரும் நுழையக் கூடாது என்பது அவரது கட் டிப்பான உத்தரவு. என்னுடைய அறை கீழே இருக்கிறது. அவர் அழைத்தால் தான் நான்கூட அந்த அறைக்குள் செல்வேன். இன்று காலையில் எழுந்து குளித்துவிட்டு இங்கே ஹாலில் உட் கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந் தேன். தற்செயலாக என் பார்வை, மாடிப் பக்கம் சென்றது. என் கண வரின் அறை திறந்து கிடந்ததைப் பார்த்தேன். பதற்றத்துடன் மேலே போய் அறையினுள் எட்டிப் பார்த் தேன். இரும்புப் பீரோ விரியத் திறந்து கிடந்தது. உள்ளே எல்லாம் வெறுமையாகக் காட்சி அளித்தது. உடனே கீழே வந்து உங்களுக்கு போன் செய்தேன்'' என்றாள் கோமதி.

''பொன்னம்பலம் எங்கே?'' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''நேற்று இரவு கோர்ட் வேலையாகச் சென்னைக்குச் சென்றார். திரும்ப இரண்டு நாட்களாகும்.''

''அப்படியா?'' என்று கேட்ட இன்ஸ் பெக்டர், ''மேலே போய் அந்த அறை யைப் பார்க்கலாமா?'' என்றார்.

''வாருங்கள்'' என்று கூறிவிட்டு முன்னே நடந்தாள் கோமதி. மூவரும் தொடர்ந்தனர்.

பொன்னம்பலத்தின் அறையினுள் நுழைந்து அந்த அறையை நோட்டம் விட்டார் நல்லதம்பி. அந்த அறை



பார்க்க மிகவும் அழகாக இருந்தது. அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய கம்பளம் விரிக்கப்பட்டிருந்த மேஜையின் முன் நான்கு நாற்காலிகள் நான்கு புறமும் போடப்பட்டிருந்தன. சுவரில் தேசத் தலைவர்களின் படங்கள் அழகாக மாட்டப்பட்டிருந்தன.

அறையின் ஒரு மூலையில், இரும்புப் பீரோ ஒன்று விரியத் திறந்து கிடந்தது. அதன் அருகே சென்ற இன்ஸ்பெக்டர், ''பீரோ புதிதாக வாங்கியதா?'' என்று கேட்டார்.

''இல்லே, பழையதுதான். நேற்று மாலையில்தான் புதிதாக வர்ணம் அடிக்கப்பட்டது. வேறு எவரையும் இந்த அறையில் நுழைய விடக் கூடாது என்பதால் என் கணவரே இதற்கு வர்ணம் அடித்தார்'' என்றாள் கோமதி.

குமாரின் கண்கள் அந்தப் பீரோவை உற்று நோக்கின. பின் அந்த அறையிலிருந்த ஒவ்வொரு பொருளையும் ஆராய முற்பட்டன.

''இந்த அறையில் யாராவது இன்று நுழைந்தார்களா?'' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''இல்லே'' என்றாள் கோமதி.

''இந்த வீட்டில் வேறு யார் யார் இருக்கிறார்கள்?'' என்று கேட்டார்

''என்னையும் என் கணவரையும் தவிர என் தம்பி மூர்த்தி, வேலைக்காரன் ஒருவன் ஆக நால்வர்தான்...''

''நான் அந்த இருவரையும் விசாரிக்க வேண்டுமே?''

''இதோ வரச்சொல்கிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்ற கோமதி சற்று நேரத்தில் அந்த இருவருடன் திரும்பி வந்தாள்.

இன்ஸ்பெக்டர் வேலைக்காரன் முனியனை விசாரித்தார். அவன் பயத்துடன் கைகளைக் கட்டிக் கொண்டு பேசினான்: ''ஐயாவோட அறைக் கதவு திறந்து கிடந்ததைப் பார்த்து அம்மா கூச்சல் போட்டாங்க. அதைக் கேட்டு விட்டு நான் சமையல்கட்டிலிருந்து ஓடி வந்தேன். அந்த மகமாயி சத்தியமா எனக்கு வேறு எதுவும் தெரியாது சாமி.''

மூர்த்தியை விசாரித்தார் நல்லதம்பி. அவன் சொன்னது இதுதான்: ''அக்கா போட்ட கூச்சலைக் கேட்ட பின்தான் நான் படுக்கையை விட்டு எழுந்து வெளியில் வந்தேன். அத்தான் ஊரில் இல்லாத நேரத்தில் இப்படி ஒரு சம்பவம் நடந்து விட்டதை நினைத்தால் எனக்கு ரொம்பவும் வேதனையாக இருக்கிறது. ''எனக்கு வேலை வாங்கித் தரேன்னு அத்தான் இங்கே வரச் சொன்னார். வந்து இரண்டு மாசமாகுது. வேலை கிடைக்கவில்லை. வேலை கிடைத்து நான் எங்கேயாவது போயிருந்தால் இப்படி உங்கள் முன் நின்று பதில் சொல்லும் நிலை எனக்கு ஏற்பட்டிருக்காது'' என்றான் வருந்தும் குரலில்.

அவனது வருத்தத்தைச் சிறிதும் பொருட்படுத்தாத நல்லதம்பி, ''இந்த அறையினுள் இதற்கு முன்னால் எப்போதாவது வந்திருக்கிறீர்களா?'' என்று கேட்டார்.

''இல்லே...இதுதான் முதல் முறை!''

''சரி, நீங்கள் போகலாம்.''.

மூர்த்தி திரும்பிக் கதவை நோக்கி நடந்தான். அவன் நடந்து செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த குமார், நல்லதம்பியின் காதருகே சென்று மெல்லிய குரலில் ஏதோ சொன்னான்.

மறு கணம், ''மிஸ்டர் மூர்த்தி!'' என்று கூவினார் நல்லதம்பி.

மூர்த்தி நின்றான். திரும்பி நல்லதம்பியைப் பார்த்தான்.

''இந்தத் திருட்டுக்கு மூல காரணம் நீங்கள்தான் என்பதால் உங்களைக் கைது செய்கிறேன்'' என்றார் நல்லதம்பி.

''என்ன இன்ஸ்பெக்டர்...'' என்று பதற்றத்தோடு எதையோ கேட்க நினைத்த கோமதியால் மேலே எதையும் பேச முடியவில்லை.

ஏட்டு ஏகாம்பரம் மூர்த்தியின் கரங்களில் விலங்கை மாட்டினார்.

''இதுவரையில் மூர்த்தி இந்த அறையினுள் நுழைந்ததில்லை. இப்போது வந்ததுதான் முதல் முறை. இதைச் சற்று முன் மூர்த்தியே கூறினார். இங்கு இது வரை வந்திராத மூர்த்தியின் சட்டையின் பின்புறம், புதிதாகப் பீரோவுக்கு அடிக்கப்பட்ட பச்சை வர்ணத்தின் கறை பட்டிருக்கிறது. இதைக் குமார் கவனித்து என்னிடம் கூறவில்லையென்றால் நானும் கவனித்திருக்க மாட்டேன். அந்த வர்ணத்தின் கறையே மூர்த்தியைக் காட்டிக் கொடுத்து விட்டது'' என்ற நல்லதம்பி, ''குமார்! என் வேலையை மிகவும் எளிதாக்கிவிட்டாய்!'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''அது இருக்கட்டும் மாமா, எங்கள் வீட்டுக்குச் சாப்பிட வருவதற்கு மறக்காதீர்கள்...'' என்றான் குமார்.

'' மறக்க மாட்டேன்... நிச்சயம் மறக்க மாட்டேன்...'' என்று சிரித்துக் கொண்டே கூறினார் நல்லதம்பி.

அனைவரையும் ஏற்றிக் கொண்ட ஜீப் காவல் நிலையத்தை நோக்கி விரைந்தது.





குழந்தைகளுக்காகவே...

மேலைநாடுகளில் குழந்தைகளின் உடல்நலத்திலும் அறிவு வளர்ச்சியிலும் விசேஷ அக்கறை காட்டுகின்றனர். ஒரு நாட்டின் வருங்காலத்தை உருவாக்கும் குழந்தைகள் நல்வாழ்வில் அவர்கள் காட்டும் அக்கறை அபாரமானது. ரஷ்ய நாட்டுக் குழந்தைகளுக்குக் கிடைக்கும் வசதிகளைப் பார்க்கும் போது நமக்குப் பொறாமையாகத் தா. னிருக்கிறது.

மாஸ்கோவிலுள்ள மிக அழகிய இடங்களில் ஒன்றான லெனின் குன்றுகளில் இளம் பயனீர் மாளிகை அமைந்துள்ளது. பதினொரு பெரிய கட்டடங்களுடன் கூடிய இந்த மாளிகையில் நானூறு பொழுதுபோக்கு அறைகளும், பரிசோதனைச் சாலைகளும், அரங்கங்களும், ஈராயிரம் பேர் இருக்க வசதி கொண்ட ஒரு 'ஸ்டேடிய'மும், நீச்சல் குளமும், ஒரு வானாய்வுக்கூடமும் இருக்கின்றன.

ஆயிரக் கணக்கான பள்ளி மாணவர்கள் இங்கு தவறாது விஜயம் செய்கின்றனர். தனக்குப் பிடித்தமான பொழுது போக்கில் இளைஞர்கள் அங்கு சென்று ஈடுபடுகின்றனர். விண்வெளி இயல், கவிதை இயற்றுதல், நுண் உயிரியல், நாய் வளர்ப்பு, இரசாயனம், பல்வேறு உடற்பயிற்சி ஆகிய துறைகள் அங்கு இருப்பனவற்றில் சிலவாகும்.

மாஸ்கோவிலுள்ள இளம் பயனீர் மாளிகைகளுள் இது மிகப் பெரியது என்றாலும், அதைப் போன்று ஒவ்வொரு மாவட்டத்திலுமாக மொத்

மேலே:
- ஜார்ஜியாவிலுள்ள கிண்டர் கார்டன் பள்ளிக் குழந்தைகள் உல்லாசமாக விளையாடக் கிளம்புகின்றன.
- கிண்டர் கார்டன் வகுப்பில் குழந்தைகளுக்கு மகிழ்ச்சியூட்டும் ஆசிரியை.

கீழே:
- பட்டுத் தொழிற்சாலையிலுள்ள கிண்டர் கார்டன் பள்ளிக் குழந்தைகளுக்கு வைத்திய சோதனை நடக்கிறது. குழந்தைகள் எவ்வளவு ஆரோக்கியமாக இருக்கிறார்கள் பாருங்கள்.
- உக்ரைன் மகாணத்திலுள்ள இளம்பயனீர் நிலையத்தில் சித்திரம் பயிலும் குழந்தைகள்.








தம் 29 மாளிகைகள் அதைப் போல் மாஸ்கோவில் உள்ளன.

மொத்தம் சோவியத் நாடு முழுவதிலும் 3500-க்கு மேற்பட்ட இளம் பயனீர் மாளிகைகளும், இல்லங்களும் உள்ளன. இந்த நிறுவனங்களில் கற்றுக் கொடுக்கப்படும் பாடங்களும், அளிக்கப்படும் வசதிகளும் முற்றிலும் இலவசமே. குழந்தைகளது படைப்பாற்றலையும், ஆக்கத் திறனையும் வளர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்டவையே இவை. இம்மாளிகைகளைத் தவிர, குழந்தைகளின் இசைப்பள்ளிகளும், இத்துறையில் முக்கிய பங்காற்றுகின்றன.

சோவியத் திரைப்பட உற்பத்தித் துறையில் குழந்தைகளுக்கான திரைப்பட உற்பத்தி மிக முக்கியமானதும், சதா வளர்ச்சியடைந்து வரும் துறையும் ஆகும். சோவியத் நாட்டிலுள்ள மாக்ஸிம் கார்க்கி திரைப்பட ஸ்டுடியோதான் உலகிலேயே குழந்தைகளுக்கான திரைப்படங்கள் எடுப்பதற்கென்றே ஏற்படுத்தப்பட்ட முதல் ஸ்டுடியோ.


நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் மாஸ்கோவில் குழந்தைகள் இலக்கியப் பதிப்பகம் திறக்கப்பட்டது. அதன் பின்னர் மேலும் மூன்று பதிப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவை குழந்தை இலக்கிய நூல்களை மட்டுமே வெளியிடுகின்றன. பிற பதிப்பகங்களும் அப்போதைக்கப்போது விசேஷ குழந்தை நூல்களை வெளியிடவும் செய்கின்றன. ஆண்டுதோறும் 2500 புதிய குழந்தைப் புத்தகங்கள் (மொத்தம் 28 கோடிப் பிரதிகளில்) வெளியிடப்படுகின்றன.

ரஷ்யாவில் வருங்காலத் தலைமுறையின் ஆரோக்கியமான உடலுக்கும், ஆரோக்கியமான உள்ளத்துக்கும் சமூகம் முழுவதுமே பொறுப்பேற்றுக் கொள்ளுகிறது. —நன்றி: ரஷ்யச் செய்தித் துறை

இந்தப் பக்கத்தில் - மேலே: ○ மோட்டார் ரேஸ் பயிற்சி. ○ விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடத்தில்.
கீழே: ○ முகாம்களில் சமையல் செய்வதும் குழந்தைகளே. ○ கைவேலை, பூத்தையல் பெண் குழந்தைகளுக்குப் போதிக்கப்படுகிறது.
அடுத்த பக்கத்தில் - மேலே: ○ வலுவுள்ள உடலுக்கு விதவிதமான பயிற்சிகள்.
○ 'ரொட்டி, கேக், பிஸ்கேத்தும் செய்யத் தெரியுமே எங்களுக்கு'
○ கப்பல் கட்டும் கலையில் பயிற்சி.
○ 'நடனம் ஆடினார் வெகு நாகரிகமாகவே' என்று பாடுவீர்கள் நீங்கள், நாங்கள் நிஜமாக நடனம் ஆடவே செய்வோம்!'











காக்கைக்குக் கல்யாணம்

காக்கைக் குஞ்சுக்குக் கல்யாணம்
காட்டுக்குள்ளே நடந்தது
பாக்குமர உச்சியில்
பந்தலிலே திருமணம்.

ஒண்ணரைக்கண் மாப்பிள்ளை
ஒற்றுமையான சம்பந்தி
மண்ணுலகில் யாருமே
மறக்கமுடியாத் திருமணம்.

தாலிகட்டி முடிந்தது
தவழ்ந்து இரவும் வந்தது
மாடியறைக்கு மணப்பெண்ணும்
மாப்பிள்ளையும் சென்றனர்.

மூக்குநீண்ட மாப்பிள்ளை
முறைத்து முறைத்துப் பார்த்தது
காக்கைக் குஞ்சு பயந்துபோய்க்
கட்டிலின்கீழ் சென்றது.

கட்டிலின்கீழ் சுண்டெலி
கொட்டக் கொட்ட முழித்தது
காக்கைக் குஞ்சு அதனையே
கவ்விக்கொண்டு சென்றது.

எலியைத் தின்னும் பெண்டாட்டி
எனக்கு வேண்டாம் என்றது
காக்கையண்ணு கத்தவும்
காடுமுழுவதும் ஒலித்தது.

கல்யாணம் காணவந்த
காக்கைகெல்லாம் வருத்தமாம்!
'காகா' என்று கத்தியே
கலைந்து பறந்து சென்றதாம்!

— என். சிவராமன்

பூனைக்குட்டி

எங்கள் வீட்டுப் பூனைக் குட்டி
எம்பி எம்பிக் குதிக்குமாம்
இங்கும் அங்கும் தேடித் தேடி
எலியைப் பிடித்துத் தின்னுமாம்

ஒட்டி ஒட்டிக் கூட வந்தே
ஒழுக்குப் பாலைக் குடிக்குமாம்
கட்டிக் கட்டி முத்த மிட்டால்
கழுத்தை நக்கித் தொலைக்குமாம்

ஒண்டிச் சேவல் தன்னைக் கண்டால்
ஓட ஓட விரட்டுமாம்
அண்டை வீட்டு நாயைக் கண்டால்
அலறிப் புடைத்தே ஓடுமாம்

குண்டுப் பாப்பா கிட்டே வந்தால்
குதித்துக் குதித்தே ஆடுமாம்
செண்டு போல வாலைத் தொட்டால்
சீறிச் சீறிப் பாயுமாம்

— பாரதி நேசன்





கோயில் எல்லாம் சரவிளக்கு — உயர்
கோபுர மீதில் சுடர்விளக்கு
வாயிலில் தோரண மணிவிளக்கு—மலர்
வாவியின் நடுவில் அணிவிளக்கு

தென்னை மாவும் நற்பாகும் — சுவை
தேர்ந்திடக் கலந்த மாவிளக்கு
வானமும் உலகும் வாழ்வுபெற.— தமிழ்
வான்மறை ஒளிரும் பாவிளக்கு;

அயன்திரு மாலும் அறியாத — திரு
அண்ணாமலையின் அருள்விளக்கு;
நயந்தரு அடியார் உள்ளமெலாம்-அன்பு
நலமுற ஏற்றிய திருவிளக்கு;

அழகிய வானில் நிலவுண்டு — அங்கு
அருகினில் கார்த்திகை ஒளியுண்டு;
பழகிய சங்கத் தமிழுண்டு — அதில்
பாடிடக் கார்த்திகை விளக்குண்டு;

கந்தனுக்கினிய கலைவிளக்கு — பெருங்
கார்த்திகைத் தீப ஒளிவிளக்கு
வந்தனை செய்து பணிந்திடுவோம்—நாம்
வாழ்வினில் இன்பம் அணிந்திடுவோம்!

— கவிஞன் காரானன்

கார்த்திகை தீபம்



வீட்டிலெங்கும் தீபம்! — அகல்
விளக்கில்வைத்த தீபம்!
நாட்டிலெங்கும் தீபம்! — ஜோதி
நல்குகின்ற தீபம்!

காணும்எழில் தீபம்! — அரோ
கராஎனுமோர் தீபம்!
வானளாவும் தீபம்! — திரு
வண்ணாமலை தீபம்!

ஒளியைத்தரும் தீபம்! — பக்தி
உணர்வைத்தரும் தீபம்!
களிப்பைத்தரும் தீபம்! — இந்தக்
கார்த்திகையின் தீபம்!

— நெல்லை ஆ. கணபதி

லிக்கென்ஸ் (Lichens)

வேர் கிடையாது. இலை, பூ எதுவும் கிடையாது. ஆனால் இது ஒரு தாவரம். இலை, பூ இல்லாவிட்டாலும் இவை காண்பதற்கு வனப்பு மிக்கதாக இருக்கும். பழுத்த சாம்பல் அல்லது வெள்ளை, ஆழ்ந்த பச்சை ஆகிய வண்ணங்களில் காணப்படும். பச்சை வண்ணம் நைப்பும் காற்றில் ஈரம் கலந்திருக்கும்போதும் ஏற்படும். 16,000 வகை லிக்கென்கள் காணப்படுகின்றன. எல்லா இடங்களிலுமே இவைகளைக் காணலாம். சூரிய வெப்பத்தினால் சுட்டுப் பொசுங்கிய பாலைவனப் பகுதிகளிலும் அண்டார்டிக்காவின் பாறைகளிலும் லிக்கென்களைக் காணலாம். வெறும் தரை, பாறை, பட்டுப்போன மரம், மரப்பட்டை, ஒதுக்கப்பட்ட இடங்கள் எங்கும் இவை வளரும். வெப்பம், குளிர், ஈர நைப்பு, வறட்சி எந்தச் சூழலிலும் வளரக்கூடியவை லிக்கென்கள். இவை வளராத ஒரே ஒரு இடம், நகரங்களுக்கு அருகில் - புகை, புழுதி, நிலக்கரி வாயு ஆகியவையுள்ள இடம். இந்தச் சூழல் இதைக் கொன்றுவிடும்.

லிக்கென் என்பது இரண்டு தாவரங்கள் ஒன்றாகச் சேர்ந்து வளரும் ஒரு தாவரம். ஃபங்கஸ் என்ற காளானும் அல்ஜி என்ற கடல் தாவரத்தோடு வளரும் ஒரு வகைப் பாசியும் சேர்ந்த இனம். லிக்கெனின் பெரும் பகுதி பழுப்பு நிறமாகவும் நூல் போன்ற காளானும் கூடியது. காளான் நார்களுக்குப் பசுமை நிறத்தைக் கொடுப்பது அல்ஜி (Algae).

அல்ஜி பசுமையாக இருப்பதினால் தன் உணவைத் தயாரித்துக்கொள்ளும். பசுமை நிறமற்ற காளானால் உணவு தயாரிக்க முடியாது. லிக்கெனிலுள்ள காளான், அல்ஜி தயாரிக்கும் உணவைப் பயன்படுத்திக் கொண்டு வாழுகிறது. அல்ஜிக்கு நீர்ப் பசை வேண்டுமல்லவா உணவைத் தயாரிக்க? இதைக் காளான் தருகிறது. வேர் இல்லாததல்லவா இது? இப்படி ஒன்றுக்கொன்று உதவி, ஒற்றுமையாக, ஒரே தாவரமாக வாழ்கின்றன லிக்கென்கள். இப்படி ஒன்றையொன்று நம்பி வாழும் இனத்துக்கு ஸிம்பயாஸிஸ் (Symbiosis) என்று பெயர். இது கிரேக்க மொழி. ஒருங்கிணைந்த வாழ்க்கை என்று பொருள்.

லிக்கென்கள் மிக மெதுவாகவே வளரும். ஆனால் நீண்ட காலம் உயிர் வாழும். லிக்கென்களின் சில கூட்டங்கள் (காலனி) 2000 ஆண்டுகள் வரை வாழ்ந்திருப்பதாகக் கருதுகின்றனர்.

தலைகீழாக விழாமல் நடக்கும் ஈ

ஆச்சரியமானதும் அபாயகரமானதுமான ஓர் ஜந்து ஈ. ரோமம் அடர்ந்த இதன் பாதங்களும் கால்களும் நோய்களைப் பரப்புகிறது. அழுக்கு அசிங்கம் இவைகளில் உண்டு உறங்கிப் பெருகுவதினால் இங்கிருந்து நோய்களையும் இது பரப்புகிறது.

இந்தச் சிறிய ஜீவனின் அமைப்பு முறை அற்புதமானது. வீட்டு ஈக்கு இரு பெரிய காவி வண்ணக் கண்கள் உண்டு. ஒவ்வொரு கண்ணும் ஆயிரக்கணக்கான லென்ஸ்களினால் ஆக்கப்பட்டது. இவ்விரு பெரிய கண்களுக்கும் கூட்டுக் கண்கள்—காம்பவுண்டு அய்ஸ்—என்று பெயர். இதைத் தவிர தலையின் மேல் நோக்கியவாறு மூன்று சாதாரணக் கண்கள் உண்டு. இதைப் பூதக்கண்ணாடி கொண்டுதான் காண முடியும்.

ஆண்டெனா அல்லது ஸ்பரிசக் கருவிகள் ஈக்களுக்கு மணத்தை அறியும் கருவிகளாகத்தான் பயன்படுகின்றன. உணர்ச்சிக் கருவிகளாக இல்லை.

வெகு தூரத்திலுள்ள வாசனையையும் ஆண்டெனாக்கள் அறிந்து கொள்ளும். இதன் வாய் என்பது நாக்கு மட்டும்தான். இந்த நாக்கு உண்மையில் ஒரு நீண்ட குழாய். இதனால் ஈக்கள் உணவை உறிஞ்சிக்கொள்ளும்.


வீட்டு ஈயின் உடல் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தலை, நடுப் பாகம் அல்லது தோரக்ஸ், வயிறு இவையே இந்த மூன்றும். கண்ணாடிச் சிறகுகளுக்குப் பின்னால் தோரக்ஸின் இரு பக்கமும் உள்ள இரு சிறு மூண்டுகள் ஈ சமநிலையில் பறப்பதற்கு உதவி செய்கின்றன. தோரக்ஸ் என்ற வரியிட்ட நடுப் பாகத்துடன் மூன்று ஜோடிக் கால்கள் இணைந்திருக்கின்றன. ஒவ்வொரு காலும் ஐந்து பாகங்களாக வகுக்கப்பட்டுள்ளது. இதில் கடைசிப் பாகமே இதன் பாதம். ஈயினால் வீட்டின் விதானத்தில் தலை கீழாக நடந்து செல்ல முடியும். பாதங்களின் அடியில் இதற்காக இரு நகங்கள் அமைந்திருக்கின்றன. இந்த நகங்களில் ஒட்டிக்கொள்ளும் ஒருவகை அமைப்பு (Sticky Pads) உள்ளது. இதன் உதவியாலும் காலிலுள்ள ரோமங்களின் உதவியாலும் ஈ விதானத்திலும் மிக லாவகமாக விழாதபடி நடக்க முடிகிறது. காலில் உள்ள ரோமங்கள் நோய்க் கிருமிகளைச் சுமந்து செல்லும் சாதனமும் கூட.



ஆமையினால் சத்தமிட முடியுமா?

ஒவ்வொரு பிராணியும் சத்தமுண்டாக்குவதைக் கருத்தில் கொண்டு பார்த்தால் அநேகமாக ஆமைகள் எவ்வித ஒலியும் எழுப்புவதில்லை என்றுதான் கூற வேண்டும். ஆனால், சில பெரிய ஆமைகள், கனைப்பு, உறுமல், முனகல் போன்ற ஒலிகளை எழுப்புகின்றன. ஆமைகளில் பல வகை உண்டு. நிலத்தில் வாழும் ஆமைகள், கடல் நீரில் வாழும் இனம், சுத்த நீரில் வசிக்கும் ஆமைகள் என்று பல வகை உண்டு. உலகில் முதலில் தோன்றிய பிராணிகள் டினோசார் என்று உங்களுக்குத் தெரியும். இந்த டினோசார்களுக்கும் முன்னாலிருந்தே வாழ்ந்தவை இந்த ஆமைகள் என்ற கருத்தும் உண்டு.

ஆமைகளுக்கு ஒலி எழுப்ப வேண்டிய அவசியம் இல்லை. தற்காத்துக் கொள்ளத்தான் சத்தமிட்டாக வேண்டும். தன்னைக் காத்துக்கொள்ள இதற்கு அற்புதமான கவசம் — ஓடு இருக்கிறதே. கூர்மையான கரடு முரடான தகட்டினால் மூடப்பட்ட எலும்பாலான ஒரு பெட்டி. இந்த ஓடு. இந்த ஓடு இரு பாகமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு பாகம் ஆமையின் முதுகையும் மற்றது அதன் அடிப்பாகத்தையும் பாதுகாக்கும்படி அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்விரு பாகங்களுக்கும் நடுவேயுள்ள இடைவெளிக்குள் இருந்து கொண்டு ஆமை தன் தலை, கழுத்து, கால்கள் ஆகியவைகளை வெளியே நீட்டியும் உள்ளுக்கு இழுத்துக் கொண்டும் வாழுகிறது. ஆமைகள் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் வளரக் கூடியவை. உலகில் உள்ள மிகப் பெரிய ஆமையின் எடை என்ன தெரியுமா? ஆயிரம் பவுண்டுகள். இதைவிடப் பெரிய ஆமைகளும் வாழ்ந்திருக்கின்றன. இப்போது அவை அழிந்து விட்டன. ஐந்து மிலியன் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்திருந்த ஆமையின் ஒரு முழு எலும்புக்கூடு லண்டன் பொருட்காட்சி சாலையில் உள்ளது. நாலு சக்கரமும் ஓர் எஞ்சினும் இணைத்து இதை லண்டன் வீதிகளில் ஓட்டிச் செல்லலாம். அத்தனை பெரியது. ஆமைகள் அதிக நாள் உயிர் வாழக் கூடியவை. முதுகெலும்புடைய பிராணிகளில் அதிக காலம் உயிர் வாழக்கூடியவை ஆமைகள்தான்.



மீன்களுக்குக் காது கேட்குமா?


குளத்திலோ ஆற்றுப் படித்துறைகளிலோ மீன்கள் கும்பலாக மொய்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். ஒரு சிறு ஒலி ஏற்படுத்தினால் எல்லாம் குபீரென்று நீருக்குள் மூழ்கி மறைந்துவிடுவதையும் கண்டிருப்பீர்கள். மீன்களுக்குக் காது உண்டு. அவைகளால் ஒலிகளைக் கிரகித்துக் கொள்ள முடியும். ஆனால் மீன்களின் காதுகள் உங்கள் கண்களுக்குத் தெரியும்படி இருக்காது. மீன்களின் காதுகள் அவற்றின் உடலுக்குள் இருக்கின்றன.

மீன்களை நாம் பிடிக்கும்போது அவைகளுக்கு எவ்வித உணர்ச்சியும் இருக்காது என்று நாம் எண்ணினால் அது தவறு. மற்றப் பிராணிகளைப் போலவே மீன்களுக்கு நரம்பு மண்டல அமைப்பு உண்டு. அதற்கு அசௌகரியம் உண்டுபண்ணினால் அதை அது உணர முடியும். அதைத் துன்புறுத்தினால் அதற்கு வலிக்கும்.

மிக நுண்ணிய ஸ்பரிச உணர்வு, ருசி இதெல்லாம் மீன்களுக்கும் உண்டு. வாசனையை அறியும் இரு சிறு உறுப்புக்கள் தலையில் அதன் மூக்கின் அருகே இருக்கின்றன. மீன் குளிர்ந்த ரத்தமுடையது என்பதால் அது வாழ்வதற்கு எரிபொருள் (Fuel) தேவையில்லை என்று கூறிவிட முடியுமா? இந்த எரிபொருள் என்பது இதன் உணவுதான். இந்த உணவு மீனின் உடலில் எரிக்கப்பட்டு அது வாழ்வதற்குத் தேவையான உயிர்ச்சத்து, வளர்ச்சி, சலனம் இவைகளைத் தருகிறது. மீனின் ரத்த ஓட்டத்தால் இந்த உணவு அதன் எல்லாப் பாகங்களுக்கும் கொண்டு போகப்படுவதால் எரிக்கப்படுவதற்கான பிராண வாயுவும் தேவைப்படுகிறது. நம்மைப் போலவே மீனின் இதயமும் ரத்தத்தைப் 'பம்ப்' செய்து வெளியேற்றுகிறது.

மீன்கள் பல்வேறு சூழ்நிலைகளில் வாழ்வதால் இவற்றின் அமைப்பிலும் பல மாறுதல்கள் உள்ளன.

சில மீன்கள் நீருக்கு அடியிலுள்ள குகைகளில் வாழுபவை. இவைகள் குருடு; பார்வை கிடையாது. ஆகவே இவற்றின் தலையில் உணர்ச்சிக் கருவிகள் இருக்கும். உப்பு நீரில், சுத்த நீரில், ஆழ்கடலின் அடியில் இப்படி அது அது வாழும் இடத்துக்கு ஏற்ப அவற்றின் உடல் உறுப்புக்கள் அமைந்திருக்கும்.




"ரூபாய் நோட்டுக்கள்!"


ரூபாய் நோட்டுக்கள் முதன் முறையாக 1862ம் வருடம் வெளியிடப்பட்ட பொழுது ஒரு பக்கம் மட்டுமே அச்சிடப்பட்டிருந்தன. 1923ம் வருடம்தான் இரு பக்கங்களிலும் அச்சிடப்பட்ட ரூபாய் நோட்டுக்கள் வெளியாயின. 1928ம் வருடம் நாசிக் அச்சகத்தில் அச்சிடப்பட்டதிலிருந்து நோட்டுகளில் அவ்வப்பொழுது சிறு சிறு மாற்றங்கள் ஏற்பட்டன. 1944 ஆம் வருடம் முதன் முறையாகப் பத்து ரூபாய் நோட்டுக்களில் பாதுகாப்பு நூலிழை பொருத்தப்பட்டது. பின்னர் ஐந்து ரூபாய் நோட்டில் 1947லும் நூறு ரூபாய் நோட்டில் 1957லும் இம்முறை கையாளப்பட்டது. நோட்டு அச்சடிக்கப்படும் தாளின் செலவைக் குறைக்க 1966–67ல் சிறிய அளவில் நோட்டுகள் வெளியிடப்பட்டன.

அதன் பின்னர் இவ்வருடம் மார்ச் மாதம்தான் முற்றிலும் மாறுபட்ட ஐந்து ரூபாய், பத்து ரூபாய், இருபது ரூபாய் நோட்டுகள் வெளியாயின. அவற்றில் வண்ணங்கள், கோடுகள், எழுத்துக்கள், எண்கள் ஆகியவை புதிய முறையில் அச்சிடப்பட்டுள்ளன. இவை எளிதாகக் கள்ள நோட்டுகள் அச்சிடப்படுவதைத் தவிர்க்கின்றன. புதிய 'இன்டாக்லியோ' முறையில் அச்சிடப்பட்டிருப்பதால் எழுத்துக்கள், எண்கள் ஆகியவற்றை விரல்களால் தொட்டு உணர முடியும். வாட்டர் மார்க்கில் அசோக ஸ்தூபியுடன் அதைச் சுற்றி ஆறு சக்கரங்களும் காணப்படுகின்றன. நோட்டின் ஓரங்கள்வரை அச்சிடப்பட்டிருப்பதால் அவை கட்டுகளாக இருக்கும்பொழுது எந்த வகையைச் சார்ந்தது என்று எளிதில் அறிந்து கொள்ள முடியும். இப்புதிய நோட்டுகளுக்கு மாதிரி அமைத்துக் கொடுத்தவர் நூறு வருடங்களாக இந்தியாவுக்குப் பாதுகாப்புப் பத்திரங்கள் அச்சிடுவதில் ஒத்துழைப்பை நல்கி வரும் பிரிட்டனைச் சேர்ந்த தாமஸ் அண்டு லாரு கம்பெனியார்.

— ச. சண்முகநாதன்

ஆதாரம்: 'ரிசர்வ் பாங்க் செய்திக் கதிர்'











சிரிக்க சிரிக்க......




"இந்த வீட்டு மணி தன்னைப் போலவே தன் நாயையும் சோம்பேறியாக்கியிருக்கிறுன்."

நந்து சுந்து மந்து (17)

கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்





குளியலும் தூக்கமும் காலையில் மந்துவிடம் புதிய தெம்பையும் சுறுசுறுப்பையும் ஏற்படுத்தியிருந்தன.
வைஜயா! இரவு என்ன சுகமான தூக்கம்? வெந்நீர்ப்பாட்டில் தண்ணி இதமா இருந்தது...ஐயோ இதென்ன திரைச் சீலைக் குள்ளே?
ஏதோ பூதமோ பிசாசோதான்! சந்தேகமே இல்லே. இந்த வெந்நீர்ப் பாட்டிலே இதன் தலையிலே போட்டு...
ஆனால் திரைச் சீலைக்குப் பின்னால் இருந்தவர்களோ மந்துவைத்தேடி வந்த நந்துவும் சந்துவும்!
அம்மாடி! தலை வெடிச்சுப் போச்சே. எல்லாம் "கிர்" றடிக்குதே
ஏண்டா மந்து, சந்துவை இப்படித்தான் அடிப்பாங்களா?
ஐயையோ! நான் தெரிஞ்சா அடிச்சேன்? திரைச்சீலை தத்தா பூதந்தான்னு நெனப்புல நான் பயந்து போய்... இந்தா தண்ணீர் குடி... மயக்கம் தெளியும்..
சரி...சரி, பேசாம வந்து தொலை. ஏய். என்ன மறுபடியும் மேலே பாக்கறே? உன்னோட பெரிய பேஜாராப் போச்சு.
உன் குரங்குப் புத்தியைக் காண்பிக்கறியே. இறங்கி வந்துடு. இல்லே நான் ரொம்பப் பொல்லாதவனா இருப்பேன், ஆமா!
ஒரு முக்கியமான சாமானை விட்டுட்டு வந்துட்டேன். அதை எடுத்து வர மேலே போனா இவன் ஏன் இப்படிக் கூச்சல் போடறான்?
இப்ப எப்படி இருக்கேன் பாத்தியா? இந்த நைட் கவுன்லே தான் நான் ஒரு நாளாத் தூங்கி னேன். என்ன சுகம் தெரியுமா? இதை விட்டு வர மனசில்லே...
அடேடே! மந்துப்பயலை என்னமோன்னு நெனச்சேன். பலே. பலே!
நைட் கவுன் இல்லாட்டித் தூக்கம் வராதோ ஐயாவுக்கு?

சொர்க்கத்திலிருந்து

கே. பாலசந்திரன் நாயர்

''ஓ அல்லா! எனக்குப் பணம் வேண்டும். ஓராயிரம் பொற்காசுகள் வேண்டும்'' நாஸிருத்தீன் கோஜாவின் - பிரார்த்தனை அந்தச் சுற்று வட்டாரமெங்கும் எதிரொலித்தது. அல்லாவின் செவிக்கு அது எட்டினாலும் எட்டாவிட்டாலும் பக்கத்து வீட்டாரின் செவிக்கு அது தாராளமாக எட்டியது. பெயர் பெற்ற வியாபாரியும் செல்வந்தராயுமிருந்த ஸிராஜுத்தீன் பே என்பவர்தான் கோஜாவின் பக்கத்து வீட்டில் வசித்து வந்தார். அப்போது அவர் தம் மாளிகை மாடி மேல் வெளியே பார்த்தபடி நின்றிருந்தார். பக்கத்து வீட்டின் அங்கணத்தில் முழந்தாளிட்டுக் கோஜா கும்பிடுவதையும் பிரார்த்தனை பண்ணுவதையும் ஸிராஜுத்தீன் பே கண்டார். அந்தக் குரலை நன்குகேட்கவும் செய்தார். ''ஓ அல்லா! எனக்குப் பணம் வேண்டும், ஏராளமாகப் பணம் வேண்டும். ஓராயிரம் பொற்காசுகள்! எண்ணூறு போதாது. தொள்ளாயிரம் போதாது. தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றி ஒன்பது கூடப் போதாது. ஒன்றுகூடக் குறையாமல் ஓராயிரம் வேண்டும். அதில் குறைக்கவே முடியாது. நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். ஓ அல்லா! ஓராயிரம் பவுன் நாணயங்களை உடனே அனுப்பி வையுங்கள்!''

சின்னஞ்சிறுவர்களின் கேலிப் பிரார்த்தனையைப் போல் இது திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டேயிருந்தது. ஸிராஜுதீன் உதட்டில் புன்னகை ஒன்று பூத்தது. 'பிரார்த்தனையைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் இந்தக் கோஜா? செய்ய வேண்டிய காரியத்தையெல்லாம் ஒழுங்காகச் செய்து முடித்த பிறகுதானே, பிரார்த்தனை செய்ய வேண்டும்! அதுதானே சரி. அல்லாமல் இப்படிப் பிரார்த்தனை மட்டும் பண்ணிக் கொண்டிருந்தால் எப்படி?'

கோஜாவின் தொழுகை இப்போதும் முடியவில்லை. ஸிராஜுத்தீன் யோசித்தார். தமக்குள் சிரித்துக் கொண்டே ஒரு குறும்புத்தனம் பண்ணத் தீர்மானித்துக் கொண்டார்.

சத்தமே கேட்காமல் தன் மாடியிலிருந்து பின்வாங்கினார் ஸிராஜுத்தீன். தம் அறைக்குச் சென்று 999 பொற்காசுகளை எண்ணி எடுத்தார். காசுகளை ஒரு பையில் போட்டுப் பத்திரமாகக் கட்டி வசதியான ஒரு சன்ன



ஒரு பணப்பை!



வருகில் சென்று குறி பார்த்து அந்தப் பையைக் கீழ்ப்பக்கமாகப் போட்டார் — தொழுகையிலிருக்கும் கோஜாவின் முன்னால் விழும்படி. பணப்பை குலுங்கிக் கொண்டு கோஜாவின் முன் சென்று விழுந்தது. ஸிராஜுத்தீன் சட்டென்று மறைந்து நின்றார். கோஜா என்னதான் செய்வார் என்று பார்க்க வேண்டுமே!

கோஜா அல்லாவுக்கு நன்றி சொல்லக் கூட முற்படவில்லை — உடனே பணத்தை எடுத்து எண்ணத் தொடங்கி விட்டார். ஏதோ சந்தேகம் போல் திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்தார். நூறு நூறாக எண்ணி வேறு வேறாக வைத்தார். இருந்தும் புண்ணியமில்லை. ஒன்று குறையத்தான் செய்கிறது. ஸிராஜுத்தீனும் மனைவியும் சன்னலின் பின்னால் ஒளிந்து நின்று இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். சத்தம் போட்டுச் சிரித்து விடாமலிருக்க வாயைப் பொத்தியபடி நின்றார்கள்.

காசு முழுவதையும் பத்திரமாகப் பையில் போட்ட பின்னர் மீண்டும் பிரார்த்தனைக்காக முழந்தாளிட்டு உட்கார்ந்தார் கோஜா. ''ஓ, அல்லா! நீங்கள் பணத்தைச் சரியாக எண்ணிப் பார்க்கவில்லை. இதில் ஆயிரம் இல்லையே. உங்கள் பேரில் எனக்கு ஒரு பொற்காசு கடன் நிற்கிறது என்பதை மறந்து விடாதீர்கள். அதை நீங்கள் உங்கள் சௌகரியம் போல் அனுப்பி வைத்தால் போதும். இப்போது அனுப்பிய 999 நாணயங்களுக்காக நன்றி.'' இதைக் கேட்டவுடன் தேள் கொட்டினாற் போல் அதிர்ச்சியடைந்தார் ஸிராஜுத்தீன். திடுக்கிட்டு இரண்டும் மூன்றுமாகப் படிகளைக் குதித்து இறங்கிப் புயல் போல் ஓடினார் கோஜாவின் வீட்டுக்கு.

''கோஜா, என் பணத்தைத் திருப்பித் தாரும்!'' ஸிராஜுத்தீன் கத்தினார். ''என் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பொற்காசுகள்.''

''என்ன! உங்கள் பையா? உங்கள் காசுகளா?''

''ஆமாம். என் பைதான். நான் தமாஷுக்காக அதை மாடியிலிருந்து எறிந்தேன். ஆயிரத்தில் குறைந்தால் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று தானே சொன்னாய்! அந்தப் பிரார்த்தனை அர்த்தமற்றது என்று நிரூபித்துக் காட்டுவதற்குத்தான் அப்படிச் செய்தேன்.''

''நீங்கள் போட்டதா? ஊஹூம், நான் நம்பவே மாட்டேன். அந்தப் பை அல்லா எனக்குத் தன் அன்பளிப்பாகத் தந்ததாக்கும்.''

''நான் உன்னை இந்தப் பணப் பையுடன் நீதிமன்றத்துக்கு இழுத்துச் செல்லப் போகிறேன். அப்போதுதான் தெரியும் பணப்பை சொர்க்கத்திலிருந்து வந்ததா, என் கையிலிருந்து வந்ததா என்று!'' ஸிராஜுத்தீன் கோஜாவின் தோளில் கை வைத்தார்.

''சரி சரி, அங்கேயே செல்வோம்!'' கோஜா சொன்னார். அவருக்கு நீதிமன்றமென்றாலே கொள்ளை விருப்பம். எப்படியும் வாதாடிக் காரியங்களைக் குழப்பி மறிக்கலாமே என்ற உற்சாகம் தான் அதற்குக் காரணம்.

'சரி புறப்படுவோம்' என்று கிளம்பி விட்டார் ஸிராஜுத்தீன்.

''ஓ, என் கோட்டு. பாத்திமா அதைத் தைத்துக் கொண்டிருக்கிறாள். அதில்லாமல் எங்கும் வர என்னால் முடியாது'' என்று அடம் பிடித்தார் கோஜா.

''கோட்டு நான் தருகிறேன்.''

''உம், பிறகு என் கழுதையின் நிலைமை. அதன் காலில் ஒரு நொண்டல். இப்போது அதன் மேல் சவாரி செய்ய இயலாது.''

''நான் உனக்கு ஒரு குதிரையையும் தருகிறேன்.''

''அது சரி. சேணமும் கடிவாளமும் மட்டும் யார் தருவது? என் சின்னக் கழுதையின் சேணமும் கடிவாளமும் உங்கள் குதிரைக்குப் பொருந்தாதே.''

''அதுவும் என்னிடமிருக்கு. நீ என் வீட்டுக்கு வந்தாலே போதும். எல்லாம் சரி பண்ணி விடலாம்.''

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஸிராஜுத்தீனின் துணிமணிகளை அணிந்து அவரது குதிரை மேலேறிப் புறப்படத் தயாரானார் நாஸிருத்தீன்.

நீதிமன்றத்தில் ஸிராஜுத்தீன் நீதிபதியின் முன் நடந்தது முழுவதும் சொன்னார். அந்த நேரம் முழுவதும் கோஜா அவர் முகத்தையே ஒரு மாதிரியாகப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தப் பார்வையே ஸிராஜுத்தீனைத் திக்குமுக்காட வைத்தது. அவர் சொல்லி முடித்த உடன் நீதிபதி சொன்னார்: ''சரி, நாஸிருத்தீன் கோஜா, நீ என்ன சொல்கிறாய்?''

''பாவம் ஸிராஜுத்தீன் பே!'' கோஜா பெருமூச்சு விட்டார். ''என்ன சங்கடம் பாருங்கள் — மூளையே குழம்பிப் போன ஒருவரைப் பற்றி என்னதான் சொல்வது?''

''மூளைத் தகராறு?'' நீதிபதி கேட்டார். ''நீ என்ன சொல்கிறாய் நாஸிருத்தீன்?''

''மதிப்புக்குரிய நீதிபதியவர்களே! நீங்கள் ஒருவேளை கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள்.'' நீதிபதியின் அருகில் சென்று ஆனால் அறை முழுவதும் கேட்கும் குரலில் கோஜா கிசுகிசுத்தான். ''காண்பவையெல்லாம் தன்னுடையவை என்றுபிரமை ஏற்பட்டிருக்கிறது இவருக்கு. என் பணப்பையைப் பற்றிச் சொன்னதைக் கேட்டீர்களே! நான் அணிந்திருக்கும் இந்தக் கோட்டு யாருடையது என்று கேட்டுப்பாருங்கள், பார்க்கலாம்.''

''சந்தேகமென்ன! அது என் கோட்டுத்தான்.'' நீதிபதி கேட்பதற்கு முன்னாலே ஸிராஜுத்தீன் சொன்னார்.

கோஜா மிகப் பரிதாபமாகத் தலையசைத்தார் ''இனியும் ஏதாவது கேட்டுப் பார்ப்போமே! இந்தக் குதிரையின் கடிவாளம் யாருடையது என்று...''

''கேட்பதற்கென்ன? அதுவும் என்னுடையதுதான்.'' ஸிராஜுத்தீன் கத்தினார். ''சேணம் கூட எனது தான்!''

''அம்மம்மா! என்ன சங்கடமாயிருக்கிறது! என் எதிரிக்குக் கூட இந்த மாதிரி வரக்கூடாது என்பதுதான் என் பிரார்த்தனை பாவம், இந்த அளவுக்கு என் குதிரை கூடத் தன்னுடையது என்று சொல்லுவார் போலிருக்கிறது.''

''அதில் சந்தேகமென்ன? அது என் குதிரையேதான்!'' ஸிராஜுத்தீன் கோபம் தாங்காமல் கத்தவே செய்தார்.

''ரொம்பக் கஷ்டமாகத் தானிருக்கிறது.'' கடைசியாக நீதிபதி சொன்னார்: ''முதலில் ஸிராஜுத்தீன் தம் பணத்தை ஜன்னல் வழியே எறிந்து கொடுத்தாரென்று சொன்னதை நான் நம்பி விட்டேன். நம்புவது கஷ்டம் தான். இருந்தாலும் நம்பி விட்டேன். இப்போதுதானே, புரிகிறது விஷயம்? கோஜாவின் குதிரையும் சேணமும், கடிவாளமும் கோட்டுமெல்லாம் தம்முடையவை என்று சொல்லும் அளவுக்குப் பைத்தியமாயிருக்கிறாரே ஸிராஜுத்தீன். பாவம்! இவரது மூளை எப்படியோ குழம்பிப் போய் விட்டது. ஸிராஜுத்தீன், நீங்கள் கொஞ்சம் வீட்டுக்குப் போய் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். ரொம்பக் கூடுதல் உழைத்ததினால் வந்த தகராறு இது. நாஸிருத்தீன் கோஜா இந்தப் பணத்தையும் மற்றவைகளையும் நீயே எடுத்துக் கொள்.''

இருவரும் மௌனமாக வீடு திரும்பினர். ஸிராஜுத்தீனின் முகம் வெள்ளை வெளேரென்று இருந்தது. திடீரென்று கிழவனாகி விட்டாற் போல். நாஸிருத்தீன் கோஜா, படு குஷியாகப் பொய்க்கால் குதிரையாட்டம் ஆடுவது போல் எப்படியோ குதிரை மேலிருந்து விழாமல் சமாளித்துக் கொண்டு வந்தார்.

ஸிராஜுத்தீன் வீட்டில் சென்று கேட்டைப் பூட்டுவதற்காகத் திரும்பிப் பார்த்த போது அங்கு நின்று கொண்டிருந்தார் கோஜா. ''இதோ உங்கள் பணம்!'' கோஜா பையை நீட்டியபடி சொன்னார்: ''இதோ உங்கள் கோட்டும் குதிரையும் சேணமும் கடிவாளமும். எடுத்துக் கொள்ளுங்கள்.''

ஸிராஜுத்தீன் பே சிலையாக நின்றார் பேச முடியாமல்.

''நாமிருவருமாகச் சேர்ந்து அந்த நீதிபதியை முட்டாளாக்கி விட்டோம் இல்லையா? சரியான தமாஷ்தான்.'' கோஜா அட்டகாசமாகச் சிரித்தார். ''நான் அங்கு திரும்பிச் செல்லப் போகிறேன். இதெல்லாம் ஒரு தமாஷ் தான் என்று சொல்லப் போகிறேன். நாம் எடுக்கும் முடிவெல்லாம் சரியாக இருக்க வேண்டும் என்றில்லை என்பதை அவர் புரிந்து கொள்ளட்டும்.''

ஸிராஜுத்தீன் மெல்ல அதிர்ச்சியிலிருந்து விடுபட்டார். நடந்ததெல்லாம் தம் அயல் வீட்டுக்காரரின் தமாஷ்தான் என்று அப்போது உணர்ந்தார். ''அப்படியானால் என் குதிரையை எடுத்துச் செல்லு'' என்றார் அவர்.

''ஓ, அது வேண்டாம். என் கழுதையின் நொண்டல் இப்போது மாறியிருக்கும். பாத்திமா கோட்டையும் தைத்திருப்பாள்.'' திரும்பி நடந்தார் நாஸிருத்தீன் கோஜா.



விமானப்படைப்பிரிவில் என்.சி.சி. ஜூனியர் டிவிஷன்

இமயம் காக்கும் இளைய பாரதம்

லென்ஸ்

அன்று கலாவுக்கும் ரவிக்கும் ஒரே குஷி! காரணம் என்.சி.சி. ஆபீசர் பயிற்சி பெற வெளியூர் சென்றிருந்த ராகவன் மாமா திரும்பி வந்துவிட்டது தான்!

'என்.சி.சி.'யைப் பற்றித் தங்களுக்கு விளக்க வேண்டுமென்று வழக்கம் போலத் தொணதொணத்தனர் ரவியும் கலாவும்.

"'என். சி. சி.' ங்கறது National Cadet Corps என்ற சொல்லின் சுருக்கம்தான். தமிழில் தேசிய மாணவர் படை என்றும் இதனைக் கூறலாம்" என்ற பீடிகையுடன் ஆரம்பித்தார் ராகவன்.

"1925ல் பல்கலைக் கழக அதிகாரிகள் பயிற்சிப் படை (University Officers Training Corps) என்ற அமைப்பை இந்தியாவில் தொடங்கினார்கள். மாணவர்களிடையே கட்டுப்பாடு, ஒழுக்கம், போன்றவற்றை வளர்க்கவும், நாட்டுக்கு நெருக்கடி நிலைமைகளில் ராணுவத்துடன் இணைந்து செயல்படவும் இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டது."

"என். சி. சி. பற்றிச் சொல்லு மாமா!" என்று முணுமுணுத்தான் ரவி.

"ஆரம்பத்திலிருந்து சொன்னால் தான் உனக்குப் புரியும்." இந்த UOTC ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தேசிய அளவில் மாணவர் படை ஒன்று இருந்தால் என்ன என்று ஓர் எண்ணம் ஏற்பட்டது. இதை ஆராய பண்டிட் எச். என். குன்ஸ்ரு அவர்களின் தலைமையில் "தேசிய மாணவர் படைக் குழு" ஒன்று அமைக்கப்பட்டது. 1946ல் அமைக்கப்பட்ட இக்குழு 1947 மார்ச் மாதம் தன் அறிக்கையைச் சமர்ப்பித்தது. இதன் பேரில் 1948ம் வருடம் இந்திய அரசாங்கம் தேசிய மாணவர் படைச் சட்டத்தைக் கொண்டு வந்தது. இதுதான் என்.சி.சி. பிறந்த கதை" என்று நிறுத்தினார் மாமா.

"என். சி. சி. யின் குறிக்கோள் என்ன?" — இது கலா.

சீனியர் டிவிஷன் கேடட்டுகளுக்கு வரைபடம் பார்க்கும் பயிற்சி





ஜூனியர் டிவிஷன் காடட்டுகளின் பரேடு

●

''அடுத்த பிரிவு கல்லூரி மாணவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒன்று. இதைச் சீனியர் டிவிஷன் என்பார்கள். ஜூனியர் டிவிஷனிலும், சீனியர் டிவிஷனிலும் மூன்று உப பிரிவுகள் உண்டு. அதாவது ராணுவத்தில் தரைப் படை, விமானப்படை, கடற்படை என்று இருப்பது போல என். சி. சி.யிலும் தரைப் பிரிவு, விமானப் பிரிவு, கடற் பிரிவு என்று உள்ளன. தரைப் பிரிவில் பொறியியல் பிரிவு, சிக்னல் பிரிவு, மருத்துவப் பிரிவு, கனரக இயந்திரப் பிரிவு, ஆர்ட்டிலரி என்பது போன்ற பல உட்பிரிவுகள் உண்டு. ஆனால் இந்த உட்பிரிவுகள் சீனியர் டிவிஷன் தரைப் பிரிவுக்கு மட்டும்தான் பொருந்தும்.''

''மாமா! சுசித்ரா அக்கா கூட என். சி.சி.யில் இருக்கேன்னு சொன்னாளே?'' என்று கேட்டாள் கலா.

''ம்... சொல்ல மறந்துட்டேனே! பெண்கள் என். சி. சி. பயிற்சி பெறப் பெண்கள் டிவிஷன் என்ற பிரிவு உள்ளது. இதிலும் சீனியர், ஜூனியர் டிவிஷன் உண்டு. என்.சி.சி.யில் உள்ள பிரிவுகள் இவ்வளவுதான்.''

''அப்போ பயிற்சி?'' என்று குரல் கொடுத்தான் ரவி.

''கடவுள் மனச்சாட்சியின் மூலம் இடும் கட்டளைகளுக்குப் பணிவது கடமை (Duty). அதிகாரபூர்வமான மனிதன் இடும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது ஒழுக்கம் (Discipline).

இந்தக் கடமையும் ஒழுக்கமும்தான் என். சி.சி.யின் முக்கியமான அம்சம். என். சி. சி.யின் தாரக மந்திரங்கள்.''

''ஏன் மாமா! என்.சி.சி.யில் என்ன செய்யறாங்க?'' என்று தன் ஆவலைக் காட்டினான் ரவி.

''முதலில் என்.சி.சி.யின் உட்பிரிவுகளைப் பற்றிச் சொல்கிறேன். பிறகு அவர்கள் என்னென்ன பயிற்சி பெறுகிறார்கள் என்று சொல்கிறேன்.

''இப்போ என்.சி.சி.யில் பலவிதப் பிரிவுகள் உள்ளன. பள்ளி மாணவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டது ஜூனியர் டிவிஷன். இந்தப் பிரிவில் ஒன்பதாவது வகுப்பு மாணவர்கள் முதல் பதினொன்றும் வகுப்புமாணவர்கள் வரை சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

காடட்டுகளுக்கு முதலுதவிப் பயிற்சியும் உண்டு





கேடட்டுகளுக்குத் துப்பாக்கியை இயக்கும் பயிற்சி தரப்படுகிறது

''கொஞ்சம் இரு! என். சி. சி. நிர்வாகம் எப்படிப் பிரிக்கப் பட்டிருக்கிற துன்னு சொல்லிடறேன்.''

''என்.சி.சி. அமைப்பு, பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது. டெல்லியில் டைரக்டரேட் - ஜெனரலின் மேற்பார்வையில் நாடு முழுவதும் உள்ள 16 டைரக்டரேட்டுகள் இயங்குகின்றன. ஒவ்வொரு டைரக்டரேட்டிலும் குரூப், பட்டாலியன், கம்பெனி, ப்ளாட்டூன் என்ற பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட படைப் பிரிவுகள் இயங்குகின்றன.

''பயிற்சியைப் பொறுத்த வரையில், ஒரு மாணவனுக்கு, பொறுப்பு, கடமை உணர்ச்சி, தோழமை போன்ற பலவித மான குணங்கள் அமையக்கூடிய அளவில் அளிக்கப்படுகின்றன.

''என்.சி.சி.யில் முக்கியமான பயிற்சிகளில் ஒன்று வாரம் ஒரு முறையோ அல்லது இரு முறைகளோ நடக்கும் பரேடு (Parade). இந்தப் பரேடு தான் ஒரு மாணவனுக்கு — கேடட்டுக்கு (Cadet) ஒழுக்கத்தைப் போதிக்கிறது. ஒரு குழுவின் தலைவன் அந்தக் குழுவை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு அழைத்துச் செல்லும் போது ஒரு கட்டுப்பாடான வரிசையில் தான் அழைத்துச் செல்வான். அந்தக் குழுத் தலைவனின் ஆணைதான் அவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கும். இதே போல பரேடிலேயே 'ஃபுட் ட்ரில்', 'ரைபிள் டிரில்', 'கேன் டிரில்' என்று எத்தனையோ வகைகள் உள்ளன. இவற்றின் மூலம் ஒரு குழுவின் தலைவன் சிறந்த தலைவனாகவும் பயிற்சி கிடைக்கிறது. இது தவிர உடற்தசைகளுக்கும் நல்ல பயிற்சி கிடைப்பதால் ஒரு கேடட் எந்த நிமிடமும் 'தயாராக' (alert) இருக்க முடிகிறது.''

''என்.சி.சி.யில் வேறு என்ன பயிற்சிகள்?'' — இது கலா.

''பரேடு தவிர, ஒரு என்.சி.சி. கேடட்டுக்குச் சுடவும் தெரிய வேண்டுமல்லவா? இதற்காக நிஜத் துப்பாக்கிகளைக் கொண்டுவந்து, 25 அடி, 100 அடி, 200 அடி போன்ற தூரங்களிலுள்ள பொருட்களைச் சுடப் பயிற்சி தரப்படுகிறது. இந்தச் சுடும் பயிற்சிக்காக வென்று அமைக்கப்பட்டிருக்கும் இடம் 'ரேன்ஜ்' (Range) என்று சொல்லப்படும். 25 அடி தூர ரேன்ஜ் 'ஷார்ட் ரேன்ஜ்' (Short Range) என்றும் மற்றவை 'லாங் ரேன்ஜ்' என்றும் சொல்லப்படும். இதனால் கேடட்டுகளுக்குக் குறிபார்த்துச் சுடுவதில் பயிற்சி கிடைக்கிறது. தேர்ந்த கேடட்டுகளுக்குத் துப்பாக்கி சுடும் போட்டிகள் கூட அகில இந்திய ரீதியில் நடத்தப்படுகின்றன.

●

பெண்களுக்கும் பாண்டேஜ் போடும் பயிற்சி



[முதலுதவி பற்றிய இரு புகைப் படங்களை உதவியவர் காப்டன் கண்ணப்பன், மற்றவை : லென்ஸ்]

பதினாறு வயதில் டாக்டர் பட்டம்!



ஓஃபர் (Ofer) என்னும் இஸ்ரேலைச் சேர்ந்த மாணவன் இப்போது ஹார்வேர்டு பல்கலைக் கழகத்தின் கலை விஞ்ஞானப் பள்ளியில் டாக்டர் பட்டத்துக்குப் படிக்கிறான். இவனுக்கு வயது பதினாறு.

இஸ்ரேலைச் சேர்ந்த டெல் அவிவ் பல்கலைக் கழகத்தில் கணிதத்தில் பி. ஏ. பட்டம் பயின்றான். அதில் அவன் பெற்ற சராசரி மதிப்பெண் 99.08. ஹார்வேர்டு பல்கலைக் கழகத்தின் நுழைவுத் தேர்வில் மிக அதிகமான மதிப்பெண்களைப் பெற்றதால் எம்.ஏ. பட்டம் பெறாமலே டாக்டர் பட்டத்துக்குப் படிக்க இவனுக்குச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. அவனுடைய பட்டமளிப்பு விழாவில், இவனுக்கு ஹார்வேர்டில் இருந்த வேலை காரணமாக, இவனுடைய தாயார் திருமதி ஸாஃபாரியா மன் பங்கேற்றாள். கடந்த மே மாதம் 16ம் தேதி தன் பதினேழாவது பிறந்த நாளை இம்மாணவன் கொண்டாடினான். — **ஸ்ரீமதி லலிதா சிவராமன்**

ஆதாரம்: **இஸ்ரேல் செய்தி**

''ஸீனியர் டிவிஷனைப் பொறுத்த அளவில் பலவிதமான ரைஃபிள் (துப்பாக்கி)களைப் பற்றியும், அவற்றின் சுடும்திறன், பொறியியல் நுணுக்கம், எப்படி அவற்றைப் பாதுகாப்பது போன்றவற்றிலெல்லாம் பயிற்சி கிடைக்கின்றன. இது தவிர பாய்னட் என்று கூறப்படும் துப்பாக்கி முனைக் கத்தி எப்படி உபயோகப்படவேண்டும் என்ற பயிற்சியும் அவர்களுக்கு அளிக்கப்படும்.''

''மாமா! நிச்சயம் நான் என்.ஸி.ஸி.யில் சேரப் போகிறேன்'' என்று கூறினான் ரவி.

''இன்னும் நிறைய இருக்கு. என்.ஸி.ஸி. கேடட்டுக்கு ஒரு போர் வீரனுக்குத் தரப்படும் எல்லா விதமான பயிற்சிகளும் கிடைக்கின்றன. உதாரணமாகச் சொல்லப்போனால் ஒரு போர்வீரன் போருக்குப் போவதானால் அவனுக்கு வரைபடம் ஒன்றை ஆராயும் திறமை (Map Reading) குழுவை நடத்திச் செல்லும் திறமை (Section Leading), முதலுதவி, இயற்கையைப் பயன்படுத்திக்கொள்ளும் கலை, (Field Craft) போன்றவைகளை அறிந்திருத்தல் வேண்டும். என்.ஸி.ஸி. கேடட் ஸீனியர் டிவிஷனில் இதற்குண்டான எல்லாவிதப் பயிற்சிகளையும் பெறுகிறான்.''

''இத்தனை பயிற்சிகளும் கொடுக்க எப்படி நேரம் கிடைக்கிறது?'' என்று சந்தேகத்தை எழுப்பினாள் கலா.

''வாரம் ஒரு முறையோ இரு முறைகளோ நடக்கும் பரேடில் (அணி வகுப்பு) இவையெல்லாம் கற்றுக்கொள்வது கடினம் என்பதால்தான் வருடா வருடம் பயிற்சி முகாம்கள் நடத்தி, அங்கு அவற்றையெல்லாம் கற்றுக் கொடுக்கிறார்கள்.''

''முகாம்னா அங்கேயே தங்கணுமா?'' என்று கேட்டாள் கலா.

''பின்னே, தினமும் வீட்டுக்கு வந்திட்டா போவாங்க? இதிலே முகாமின் தன்மையைப் பொறுத்து 10 நாட்கள், 12 நாட்கள், 21 நாட்கள் என்று ஒரு கேடட் முகாமில் இருக்க வேண்டும். இந்த முகாமில் ஒரு கேடட்டைத் தங்க வைப்பதே அவனுக்குத் தன்னம்பிக்கையையும், கூடி வாழும் மனப் பான்மையையும் அளிப்பதற்காகத் தான். விசேஷ முகாம்களுக்குச் சிறப்புப் பயிற்சி பெற நல்ல காடட்டுகளைத் தேர்ந்தெடுத்துஅனுப்புகின்றனர். இவை அகில இந்திய ரீதியில் நடத்தப்படுவதால், நாட்டுப் பற்றும், சகோதர மனப்பான்மையும் பெருகும். உதாரணமாக மலையேறும் சிறப்புப் பயிற்சி ஹிமாசலப் பிரதேசத்தில் மணலி என்ற இடத்தில் அளிக்கப்படுகிறது. அதே போல் சில ராணுவ யூனிட்டுகளுடன் காடட்டுகளை 'அட்டாச்' செய்து நல்ல ராணுவப் பயிற்சி கிடைக்கவும் முகாம்கள் நடத்தப்படுகின்றன. இவை Army Attachment முகாம்கள். இது தவிர தற்போது பாராசூட் வீரர்களாகப் பயிற்சி பெற ஆக்ராவில் Para Troop Camp நடத்தப்படுகிறது.''

''ரொம்ப இன்ட்ரஸ்டிங் மாமா!'' —ரவி.

''கேளு! குடியரசு தினத்தன்று டில்லியில் அணிவகுப்பு நடக்கும். இதற்காகவும் கேடட்டுகளைத் தேர்ந்தெடுத்து டில்லிக்கு வருடா வருடம் அனுப்புகின்றனர். இதற்கு 'டெல்லி சலோ' என்று பெயர்.

''நீங்க எங்கே மாமா போயிருந்தீங்க?'' என்றாள் கலா.

''நான் என்.ஸி.ஸி. ஆபீசராக என் கல்லூரியில் வரணும்னு 'கேம்ப்டி'

அட்டையில் :

கோல்டு ஃபிஷ்ஷு பாருங்கோ
ஃபிஷ்ஷைச் சுற்றி நீருங்கோ
நீரு ரொம்ப நாறுங்கோ
நாற்றம் போனா ஜோருங்கோ !

வண்ணப்படம் : **வித்யாவ்ரதா**



என்று ஓர் ஊர் இருக்கிறது. அங்கே ராணுவப் பயிற்சி முகாம் உள்ளது. அதில் பயிற்சி பெற வேண்டும். அதற்குத்தான் போயிருந்தேன்.''

''மாமா! என்.சி.சி.யில் பரீட்சை எதுவும் கிடையாதே?'' என்று பயத்துடன் கேட்டான் ரவி.

''அங்கேதான் நீ மாட்டிக்கிட்டே! அதிலும் பரீட்சைகள் உண்டு! ஜூனியர் டிவிஷனில், ஏ-1, ஏ-2 பரீட்சைகளும், சீனியர் டிவிஷனில் பி, சி. பரீட்சைகளும், பெண்கள் டிவிஷனில் ஜி-1, ஜி-2 பரீட்சைகளும் ஒவ்வொரு வருஷமும் நடக்கும். இவற்றில் பரேடு, செய்முறை பயிற்சி, ராணுவக் கோட்பாடுகள் பற்றிய அறிவு, எல்லாவற்றுக்கும் தனித் தனியாகப் பரீட்சை உண்டு. இதில் சி சர்டிபிகேட் பரீட்சையில் பாஸ் செய்தால் நேராக இந்திய ராணுவ அகாதமிக்கு மனுச் செய்து கொள்ளலாம். இது ராணுவத்தில் சேர விரும்புபவர்களுக்குப் பலனளிக்கும். இந்தப் பயிற்சிகள், பரீட்சைகள் போன்றவற்றைத் தவிர என்.சி.சி.யில் ராணுவத்தைப் போன்றே தகுதியின் பேரில் பதவிகள் வழங்கப்படுகின்றன. இந்தப் பதவிகளின் மூலம் மாணவ கேடட்டுகள் பொறுப்பு, கடமை உணர்ச்சி, கீழ்ப்படிதல் ஆகிய அரிய குணங்களைப் பெறுகின்றனர்.''

''என்.சி.சி.யில் சேர்ந்தா நிச்சயம் ராணுவத்தில் சேரணும் இல்லையா?'' என்றான் ரவி.

''இது எல்லோரும் போடும் தப்புக் கணக்கு. என்.சி.சி. ராணுவத்தில் சேர வேண்டும் என்று யாரையும் கட்டாயப் படுத்துவதில்லை. ஒவ்வொரு குடிமகனுக்கும் இருக்க வேண்டிய முக்கிய பொறுப்பான நாட்டுப் பற்றை மாணவர்களுக்குப் போதிப்பதே இதன் முதற் கடமை. ராணுவத்தில் சேர விருப்பம் இருப்பவர்களுக்கு இது ஒரு முதற் படி. வீடு காக்க விரும்புபவர்களுக்கு இது ஓர் இன்றியமையாத பயிற்சி. ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் சொல்லியிருக்கிறார்: 'என்.சி.சி.யில் சேரலேன்னா ஒரு மாணவன் கல்வி கற்றதுக்கே பலன் இல்லே' என்று! பொதுவாகவே என்.சி.சி. படைப் பயிற்சி ஒரு மாணவனின் வாழ்நாள் முழுவதும் கலங்கரைவிளக்கமாக இருந்து வழி காட்டுகிறது. இப்போது என்.சி.சி கேடட்டுகளுக்கு வேலை வாய்ப்புத் திட்டங்களும் அதிகரிச்சிருக்காங்க. இந்தப் பயிற்சி நமக்கு நாட்டுப் பற்றை ஊட்டுவதுமின்றி, ஒரு நல்ல குடிமகனாக, தலைவனாக, தன்னம்பிக்கை உள்ளவனாக, கடமை வீரனாக வாழ வழி காட்டுகிறது.''

''மாமா! இவ்வளவு பயிற்சியும் யார் கற்றுத் தருகிறாங்க?'' என்று அதுவரை கேட்காமல் அடக்கி வைத்திருந்த கேள்வியைக் கொட்டினான் ரவி.

''எங்களைப் போன்ற என்.சி.சி. ஆபீசர்கள். 'பகுதி நேர ஆபீசர்கள்' என்று அழைக்கப்படுகின்றனர். எங்களுடைய வாராந்திர அணிவகுப்புக்கு முழு நேர ராணுவ அதிகாரிகளும், சிப்பாய்களும் வந்து கேடட்டுகளுக்கு எல்லாப் பாடங்களையும் போதிப்பார்கள். இது தவிர நாங்களும், கேடட்டுகளில் உயர் பதவி பெற்றவர்களும் சில வகுப்புகள் எடுப்போம். கேடட்டுகளில் உயர் பதவி பெற்றவரை அண்டர் ஆபீசர் (Under Officer) என்று கூறுகிறோம். முகாம்களில் முழு நேர அதிகாரிகளும், பகுதி நேர அதிகாரிகளும் சேர்ந்து பயிற்சி கொடுப்பார்கள்.''

'' 'என்.சி.சி'ன்னா வெறும் 'லெப்ட் ரைட்'னு மட்டும் நினைச்சிண்டிருந்தேன் மாமா! ஆனா அதற்குப் பின்னால் எத்தனையோ விளக்கங்கள் இருக்கே!'' என்று வாயைப் பிளந்தான் ரவி.

''இன்னும் எத்தனையோ விவரங்கள் இருக்கு. ஆனா அதைப் புரிஞ்சுக்க நீயும் ஒரு கேடட்டாக இருந்தால்தான் முடியும்'' என்று முடித்தார் மாமா.

எங்கோ தொலைவில் தேசிய கீதம் ஒலித்தது. ராகவன் எழுந்து 'அட்டென்ஷ'னில் நிற்பதைப் பார்த்துக் கலாவும் ரவியும் எழுந்து நின்று 'சல்யூட்' செய்தனர்.

ஒரு பொய் பல பேய்...

கோடை விடுமுறையில் கிராமத்துக்கு வந்திருந்தான் செந்தில். மாமா தான் அவனுக்கு வரச் சொல்லிக் கடிதம் போட்டிருந்தார்.

ரயிலை விட்டு இறங்கி ஸ்டேஷனைப் பார்த்தான் செந்தில். மாமாவைக் காணோம்.

'நான் இந்த ரயிலில்தான் வருவேன் என்பது மாமாவுக்குத் தெரிந்திருக்காது. தெரிந்திருக்குமானால் அவரே ஸ்டேஷனுக்கு வந்திருப்பார்' என்று யூகித்துக் கொண்டான்.

ஸ்டேஷனிலிருந்து கிராமம் இரண்டு மைல் தூரம். கால்நடையாகத்தான் போக வேண்டும். மாலை நேரம். வெயில் சாய்ந்து வெப்பம் பக்குவமாக இருந்தது. சூட்கேசைத் தூக்கிக் கொண்டு விரைந்து நடந்தான்.

இரண்டு வருஷங்களுக்குப் பிறகு பிறந்த மண்ணை மிதிக்கப் போகிற ஆவல். அரை மணிக்குள் பாலத்து மேட்டுக்கு வந்துவிட்டான். பாலத்து மேடுதான் மணிகண்டம் கிராமத்தின் நுழைவு வாயில்.

ஆற்றில் வெள்ளம் வற்றி, மணல் சர்க்கரையாய்க் கொட்டிக் கிடந்தது. சூட்கேசை வைத்துவிட்டுக் காரணம் இல்லாமல் மணலில் அங்கும் இங்கும் குதித்தான். கிராமத்தில் இருந்தவரைக்கும் பாலத்து மேடு அவனுக்கு ரொம்பவும் இஷ்டமான இடம், மாலை வேளைகளில் பொழுதுபோக்குவதற்கு. அதனால்தான் அத்தனை குஷி..

பாலத்து ஆலமரம் நாதியற்று நின்றது. செந்திலுக்குத் திகைப்பான திகைப்பு.

ஏன், பாலத்துமேட்டில் இன்று யாரையுமே காணோம் ?

சாயங்காலம் ஆகிவிட்டால், பையன்களும் சிறுமிகளும் கொண்டாட்டம் போடுவார்களே ! இன்று ஏன் ஒருவரையும் காணோம் !

ஆல விழுதில் ஆட்டம் போடுகிற பையன்களும், ஆற்று மணலில் வீடு கட்டி விளையாடுகிற சிறுமிகளும் எங்கே போனார்கள் ?

சின்னஞ் சிறுசுகள் மட்டும் அல்ல. தாத்தா — பாட்டிகள்கூடக் கோடைக் கால ஆற்று மணலில் தத்தம் பேரக் குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடுவார்களே !

அப்படிப்பட்ட பாலத்து மேடு இன்று ஏன் அனாதையாய்க் கிடக்கிறது?

செந்திலுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால், கடைசியாகக் கிராமத்தை விட்டுப் போகும்போது நடந்த பழைய சம்பவம் ஒன்று ஞாபகத்துக்கு வந்தது —

அப்பாவுக்குச் செகந்திராபாத்துக்கு மாற்றல் வருவதற்கு மூன்று நாட்கள் முன்பு என்பதாக ஞாபகம். ஜெய்ப்பூரிலிருந்து வந்த அப்பாவின் சிநேகிதர் புது மாதிரியான கண்ணாடி ஜாடிகளும், கோப்பைகளும் கொண்டு வந்திருந்தார். அவற்றுள் ஒரு கண்ணாடி ஜாடியையும், இரண்டு டீக் கோப்பைகளையும் கொடுத்து, மாமா வீட்டில் கொண்டு போய்க் கொடுக்கச் சொன்னாள் அம்மா.

செந்திலுக்கு விளையாடப் போகிற அவசரம். முடியாது என்று மறுத்து விட்டான். பயமுறுத்தி, கோப்பையையும் ஜாடியையும் கொடுத்து அனுப்பினாள் அவன் அம்மா.

கவனமாகத்தான் அவைகளை எடுத்துக்கொண்டு போனான் செந்தில். என்றாலும் ஒரு வேண்டாவெறுப்பு. பாலத்தில் போய்க் கொண்



டிருந்த போது கைதவறி ஜாடி கீழே விழுந்து நொறுங்கி விட்டது.

நடுங்கிப் போனான் செந்தில்.

'ஏற்கெனவே, மாட்டேன் என்று சொல்லிவிட்டுப் பிறகு வற்புறுத்திக் கொடுத்து அனுப்பியதால்தான் வேண்டுமென்றே ஜாடியை உடைத்து விட்டோம்' என்று அம்மா கற்பனை பண்ணிக் கொண்டு விட்டால்....

நினைக்கவே முதுகு வலித்தது செந்திலுக்கு.

அம்மாவிடம் என்ன பதில் சொல்வது என்று நெடு நேரம் யோசித்த செந்திலுக்குக் கடைசியாக 'அப்படி ஒரு யோசனை' தோன்றியது. சொல்லித் தப்பித்துவிட்டான்.

இன்று...

பாலத்து மேடு ஏன் இப்படி அனாதையாய்க் கிடக்கிறது?

இரண்டு வருஷங்களுக்குப் பிறகு கிராமத்துக்கு வந்த ஆவலைவிட, பாலத்து மேடு நாதியற்றுப் போய்க் கிடந்தது தான் செந்திலின் மனத்தில் பெரிய கேள்விக்குறியாய் நின்றது.

பாலத்தில் ஏறித் தெற்காக நடந்தான். மாமா வீடு வந்து விட்டது.

மாமாவைப் பார்த்தானதும் நேரே கார்வண்ணனைப் பார்க்கப் போனான் செந்தில். கார்வண்ணன் கிராமத்தில் இருந்தவரைக்கும் அவனுக்கு ரொம்ப இஷ்டமான சிநேகிதன்.

அவனைப் பார்த்ததுமே முதல் கேள்வியாகப், 'பாலத்து மேட்டை'ப் பற்றித்தான் கேட்டான்.

''ஏண்டா கார்வண்ணா! பாலத்து மேடு நாதியற்றுப் போய்க் கிடக்கிறது?''

''அதை ஏண்டா செந்தில் கேட்கிறாய்?'' என்று பெரிய பீடிகை போட்டான் கார். ''நீங்க செகந்திராபாத் புறப்பட்டுப் போகு முன், அதற்கு முதல் நாள் பயணம் சொல்லிக் கொள்ள வந்த உங்க அம்மா எங்க அம்மாவிடம் சொன்னார்....''


''என்ன சொன்னார்?'' — பரபரப்புடன் கேட்டான் செந்தில்.

''உங்கம்மா என்னவோ உன்னிடம் ஒரு ஜாடி கொடுத்தாராம். அதை நீ உன் மாமா வீட்டுக்கு எடுத்துப் போகும் போது யாரோ கையிலிருந்து பறித்து வீசிய மாதிரி இருந்ததாம். ஜாடி உடைந்துவிட்டதாம், உண்மையாடா?'' என்று கேட்டான் கார்வண்ணன்.

''அட பாவமே! அம்மா அடிப்பாளேன்னு அப்படி ஒரு கதை கட்டினேண்டா, நான். நல்ல சமயத்துக்கு அந்த நேரத்தில் படித்த ஒரு பேய்க் கதை ஞாபகத்தில் இருந்து, அப்படி ஒரு பொய்யான காரணத்தைச் சொல்லித் தப்பித்தேன். ஆனால் அது....'' மேலே சொல்ல வார்த்தை வரவில்லை செந்திலுக்கு.

கார்வண்ணன் மீச்சத்தையும் சொன்னான்: ''உங்கம்மா எங்கம்மாவிடம் சொன்ன இந்த விஷயம் யார் யார் வாயில் எப்படி உருவானதோ, பாலத்து மேடு பேய் உலாவுகிற இடம் என்றும், அந்த ஆலமரத்தில் பிசாசு இருப்பதாகவும் ஊரில் வதந்தி பரவி, ஒரு ஈ காக்காய் கூட இப்போது அந்தப் பக்கம் போவது கிடையாது....''

திகைத்துப்போய்விட்டான் செந்தில். அன்று தான் தப்பிப்பதற்காகச் சொன்ன ஒரு சின்னப் பொய் ஊரில் இத்தனை பேய்களை உருவாக்கி, பூங்கா, கடற்கரை இல்லாத கிராமத்துக்குப் பூங்காவாகவும் கடற்கரையாகவும் இருந்த பாலத்து மேட்டை வெறுமையாக்கி விட்டதே என்ற ஏக்கம் பெரிதும் வாட்டியது செந்திலை.



எஸ். ராஜேஸ்வரி



அந்த மரத்திலே அழுப் பதிந்திருந்த வாள், நிலவொளியின் ஒளியிலே சிரித்துக் கொண்டிருந்தது. தன் காதலன் சத்தியன் அந்த வாளை மரத்திலிருந்து எடுப்பதிலே வெற்றி யடைய வேண்டுமே என்று தடதடக்கும் நெஞ்சுடன் காத்துக் கொண்டிருந்தாள் பூங்குழலி. 'இக்கட்டான வேளையிலே எனக்கு உதவுவதாகக் கூறியிருந்தாரே என் தந்தை, அந்த வேளை இப்போது வந்திருக்கிறது. காலையில் எழுந்ததும் கங்காளன் என் வாழ்வை முடிப்பதாகக் கூறியிருக்கிறான். இந்த நிலையில் இந்த வாள் என் கைக்குக் கிடைக்கும்படியாக என் தந்தை உதவுவாரேயானால்.....?' இப்படிச் சிந்தித்தபடியே பரபரக்கும் கைகளிரண்டையும் தேய்த்துக்கொண்டு வாளின் கைப்பிடியை அழுத்திப் பிடித்தான் சத்தியன். அடுத்த விநாடி மெழுகிலே செருகிய வாளை உருவுவதுபோல் மிக இலகுவாக மரத்திலே பாதிக்கு மேல் பதிந்திருந்த அந்த வாள் — எத்தனையோ வீராதி வீரர்களெல்லாம் முக்கி முனகி முயன்று பார்த்து முடியாமல் தோல்வி கண்ட அந்த வாள்-சத்தியன் இழுத்ததும் இசைவாக அவன் கைக்கு வந்துவிட்டது!

ஒரு விநாடி சத்தியனுக்கு மூச்சே நின்று விட்டது. பூங்குழலியின் இதயத் துடிப்பும் ஒரு விநாடி நின்றது. தாங்க முடியாத வியப்புடன் அந்த வாளைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டான். அவன் உடல் சிலிர்த்தது. அதே சமயம் பிரமிப்பிலிருந்து விடுபட்ட பூங்குழலி சின்னக் குழந்தையைப் போலச் சத்தியனைக் கட்டிக் கொண்டு குதித்தாள்.

''இனி உங்களை வெல்ல யாராலும் முடியாது. இந்த வாளுக்கு அப்படியொரு சக்தி'' என்று திக்கித் திணறியபடி கூறினாள் பூங்குழலி.

இதற்குள் தன் நிலைக்கு வந்திருந்த சத்தியன், ''பூங்குழலி! உன்னுடைய நன்மைக்காகக் கூறுகிறேன். நாம் இனி இங்கு கணமும் தாமதிக்கக் கூடாது. இங்கு தாமதிப்பதானால் காலையில் உன் தந்தையோடு போராட வேண்டியிருக்கும். முடிவு உனக்கு வேதனை தருவதாகவும் இருக்கலாம். ஆகவே உன் தந்தையோடு சண்டையிடுவதைத் தவிர்க்க வேண்டுமானால் நாமிருவரும் இப்போதே இங்கிருந்து தப்பியோட வேண்டியதுதான். இந்த வாள் என் வசம் இருக்கும்போது வழியில் எதிர்ப்படும் எவ்வித அபாயங்களைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். உடனே கிளம்பு!'' என்றான்.

காதலனின் வார்த்தையை ஆணையாக ஏற்றுக்கொண்டாள் பூங்குழலி. சீராட்டிப் பாராட்டி வளர்த்த தந்தையை விட்டுக் காதலனுக்காகப் பிரிந்து போய்விட முடிவு செய்து விட்டாள். கங்காளன் தூங்கிக் கொண்டிருந்தான். அந்த வீட்டை விட்டு வெளியேறுவது சுலபமல்ல. உள் பக்கம் தாளிட்டுப் பூட்டியிருந்தான் கங்காளன். தன் மகள் ஓடிவிடப் போகிறாள் என்பதற்காக அல்ல. தான் உயிராக நேசிக்கும் தன் அருமை மகளின் மனத்தை மயக்கிய வாலிபன் தப்பிப் போகக் கூடாது என்பதற்காகத்தான் வாயிலைப் பூட்டிச் சாவியைத் தன் கழுத்திலே மாலையாக மாட்டிக் கொண்டிருந்தான்.

8

ஆனால் யாரை அவன் தன் உயிராக எண்ணினானோ, யாருடைய பிரிவைத் தாங்க முடியாது என்பதற்காகச் சத்தியனைக் கொன்றுவிட நினைத்தானோ அவனே அந்த அருமை மகளே, அவனை



விட்டுப் போகத் தீர்மானித்துவிட்டாள். இந்த விபரீதத்தை உணராத கங்காளன் அடித்துப் போட்டவனைப் போல் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

தந்தை உறங்கும் அறைக்கு வெளியில் ஒண்டி ஒதுங்கி எட்டிப் பார்த்தாள் பூங்குழலி. கங்காளனின் கழுத்திலே முடிந்த கயிற்றிலே இணைந்த கதவுச் சாவி அவன் உடலில் படாமல் தனியாகப் படுக்கையில் கிடந்தது. தன் பூப்போன்ற பாதங்களைப் பூனைபோலப் பதித்துத் தந்தையின் அருகிலே போனாள் பூங்குழலி. மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டாள். அவளது மென் விரல்கள் மெது மெதுவே இயங்கின. விரல்கள் சாவியைப் பற்றின. ஆனால் அதை இணைத்திருந்த சரடு முரடாக இருந்தது. 'உன்னை வளர்த்த தந்தையை உதறிவிட்டுப் போகலாமா?' என்று கேட்பது போல அவள் விரல்களுக்கு விலக மறுத்தது கயிறு. விநாடிகள் விஷமாகத் தோன்றின அவளுக்கு. கங்காளனின் அருகே குனிந்தாள். அவன் மூச்சுக் காற்று அவள் முகத்திலே பட்டது. கயிற்றைப் பற்களுக்கிடையே கொடுத்து இழுத்தாள் உறுதியாக. 'காதலனோடு வாழ்வதிலே இத்தனை உறுதியோடு இருப்பவளுக்குக் குறுக்கே இனி நாம் இருப்பானேன்?' என்று கயிறு விட்டுக் கொடுத்துப் பட்டென்று அறுந்தது. தலைவாசல் சாவி பொதிந்த கையினால் தடதடக்கும் நெஞ்சை அழுத்திக் கொண்டு காத்திருக்கும் காதலனிடம் ஓடிவந்தாள் பூங்குழலி. ஓசைப்படாமல் தலைவாசல் கதவைத் திறந்தான் சத்தியன். இருவரும் வெளியே வந்தார்கள். பூங்குழலியின் கைகளைப் பற்றிக்கொண்டு ஓடலானான் சத்தியசீலன். நீல வானத்திலே கண் சிமிட்டிச் சிரிக்கும் நட்சத்திரங்கள் மேகக் கூட்டத்திலே மறைந்து கொண்டன. அந்த இளங்காதலர்களுக்கு விதி கொடுக்கவிருக்கும் தண்டனையைக் காணப் பிடிக்காமல்தான் அப்படி ஒளிந்து கொண்டனவோ?

தம் மகனின் அருகில் இல்லாவிட்டாலும் பராக்கிரமருக்குச் சத்தியனின் நடவடிக்கைகள் முழுவதும் தெரிந்துதான் இருந்தன. அப்படியொரு சக்தி அவருக்கு உண்டு. தம் மகனின் எண்ணம் ஒரு பெண்ணின் அழகிலே சென்றதை அறிந்து முதலில் சற்றே கோபம் கொண்டாலும் பின்னர் இயற்கையின் நியதியை மாற்ற முடியாது என்று சமாதானமடைந்தார். பூங்குழலியை அடைவதில் அவனுக்கு உதவ வேண்டும் என்றும் விரும்பினார். கங்காளன் பக்கம் நியாயம் இருக்கிறது என்பது அவருக்குத் தெரியாததல்ல. ஆனால் மகன் மீதிருந்த பாசத்தினால் நேர்மைக்கு அப்பாற்பட்ட செயலைச் செய்கிறோம் என்ற மன உறுத்தலுக்கு மதிப்பளிக்காமல் தம் நகருக்குக் காவல் தெய்வமாக விளங்கும் புவனாவை அழைத்தார். தேவகன்னிகையான அவளைக் கொண்டு சத்தியனுக்கு உதவச் செய்யலாம் என்று எண்ணினார். ஆனால் அதே சமயம் வானத்திலே ஒரு மின்னல் ஒளி கொடியாக ஓடியது.

அந்த ஒளிப் பிழம்பிலே செம்மறியாடுகள் பூட்டிய ஒரு தேரிலே ஒரு தேவதை காட்சியளித்தாள். குதிரைகளை விட வேகமாக, உ[illegible]கமாக அந்தச் செம்மறி ஆடுகள் தேரை இழுத்து வந்தன. ஒரு கையில் அவற்றின் கடிவாளத்தைப் பற்றியபடி மறு கையைப் பராக்கிரமருக்கு உயர்த்தி ஆணையிட்டாள் அந்தத் தேவதை. அவள் தோன்றியதுமே பராக்கிரமருக்கு அது யார்



என்று புரிந்து விட்டது. நீதியின் தேவதைதான் அவள். நீதியும் நேர்மையும் எங்கு பாதுகாக்கப்படவில்லையோ அங்கு அவற்றைக் காப்பதற்குத் தோன்றுவாள் அந்தத் தேவதை. அருளும் தவ வலிமையும் பெற்றவர்களின் பார்வைக்கே அவள் தென்படுவாள். பராக்கிரமரும் அப்படிப் பட்டவராயிற்றே. நீதிதேவதை கூறினாள்:

''பூங்குழலியைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தவன் கங்காளன்.. அவனது உடைமையே அவள். கங்காளன் கானக வாசியானாலும் பண்புடையவன். பிறருக்கு உதவும் உதார குணமுடையவன். ஆகவே அவன் விருப்பத்துக்கு மாறாக அவனது மகளைக் கவர்ந்து செல்வது முறையற்ற செயல். இதை நீங்கள் அனுமதித்து அதற்கு உடந்தையாகவும் இருப்பதானால் பராக்கிரமரின் ஆட்சியிலே தர்மம் செத்து விட்டது என்றுதான் கூற வேண்டும். நீதியை நிலைநாட்ட வேண்டியது உங்களைப் போன்ற உத்தம அரசர்களின் கடமையில்லையா?''

இதைக் கூறிவிட்டு மறைந்தாள் அந்த நீதி தேவதை. இதற்கு மேலும் நெறி பிறழுவாரா பராக்கிரமர்? மகன் என்ற பாசம் மறைந்தது. அவர் மனமும் மாறியது. மன்னவன் என்ற முறையில் தர்மத்தின் வழி நடக்கத் துணிந்தார். புவனாவைத் திருப்பி அனுப்பி விட்டார். பறக்கும் குதிரைமீதேறித் தனது வழக்கமான பவனிக்குக் கிளம்பினாள் புவனா.

புவனா நிலவுலகை நோட்டமிட்டபடி வான வீதியிலே வந்து கொண்டிருக்கும் போது ஒரு மலைப் பகுதியில் இளங் காதலர் இருவரைக் கண்டாள். அவ்விருவரும் சத்தியனும் பூங்குழலியும் தான். இரவெல்லாம் நிற்காமல் ஓடி ஓடிக் களைத்துப் போய் ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தார்கள். பூங்குழலி துவண்டு போய்ச் சத்தியனின் மடியிலே தலை வைத்துப் படுத்திருந்தாள். ஒரு பாறை மீது சாய்ந்தபடி அமர்ந்திருந்தான் கானகத்துக் காளையான சத்தியன். அவன் கை எட்டும் இடத்திலே அந்த வாள் இருந்தது.

அழகும், இளமையும் கொண்ட அந்தக் காதலர்களை, அவர்கள் அப்போதிருந்த பரிதாபமான நிலையைக் கண்ட புவனா உள்ளம் இளகியது. 'இந்த இளஞ் சிட்டுக்களுக்கு நாம் உதவினால் என்ன?' என்று எண்ணினாள். பராக்கிரமர் தன்னை அதற்காகவே கூப்பிட்டதையும் அவருடைய முதல் விருப்பமும் அதுதான் என்பதையும் அறிந்தாள் அந்தக் காந்தருவ மங்கை. நீதிதேவதையின் குறுக்கீட்டினால் பராக்கிரமர் தம் முடிவை மாற்றிக் கொண்டு தன்னை அனுப்பியதையும் எண்ணினாள். பராக்கிரமரின் விருப்பம் இப்போது மாறுபட்டிருப்பதை அறிந்தும் அந்த இளம் ஜோடிகளுக்கு உதவ வேண்டும் என்று ஆசை கொண்டாள் பத்மினி. சத்தியனும் பூங்குழலியும் அவள் உள்ளத்திலே அப்படியொரு மாற்றத்தை உண்டாக்கி விட்டார்கள். அப்போது...

வானத்திலே கண்ணைப் பறிக்கும் ஒரு மின்னல் வெட்டியது. கானகமே கிடுகிடுக்கும்படி இடி அதிர்ந்து ஓடியது. பெரும் புயலும் மழையும் வருவதற்கான அடையாளமாக 'ஓ' வென்று ஊளையிட்டது காற்று. சத்தியன் அருகிலிருந்த ஒரு மலைக் குகைக்குள் போய் ஒதுங்க எண்ணிப் பூங்குழலியுடன் கிளம்பினான். கரு மேகங்கள் சூழ்ந்து எங்கும் இருள் கவியலாயிற்று. கண்மண் தெரியாத காற்று வேறு முன்னேற முடியாமல் அவர்களை நிலைதடு



மாற வைத்தது. அப்போது மறுபடியும் ஒரு மின்னல் பளீர் என்று வீசிக் கொடியாக ஓடியது. அதன் ஒளியிலே சத்தியன் துல்லியமாகக் கண்டான். அவன் எந்தக் குகைக்கு ஒதுங்க எண்ணிப் போனானோ, அதற்கு எதிரிலிருந்த ஒரு மலைமீது கங்காளன் கையில் வாளுடன் நின்று கொண்டிருந்தான். அவன் எப்படி அங்கு வந்தான், எப்போது வந்தான் என்பது புதிராக இருந்தது. ஒரு விநாடி சத்தியன் விதிர் விதிர்த்துப் போனான். ஆவேசத்துடன் அவன் பிடி கத்தியிலே இறுகியது.

''பூங்குழலி! உன் தந்தையின் வாள் வீச்சுக்கு நான் பதில் கூறியாக வேண்டிய நிலை தவிர்க்க முடியாததாகி விட்டது. நீ விலகி நில். எங்கள் சண்டையை நீ பார்க்காமல் இருப்பது கூட நல்லது'' என்று கூறியபடி பாய்ந்து வரும் கங்காளனின் வாள் வீச்சைத் தடுத்துத் தாங்கும் துணிவோடு கால்களை அகல வைத்துக் கொண்டு வாளேந்திய கையை உஷார் நிலையில் ஓங்கியபடி காத்திருந்தான் சத்தியன். புயலாகத் தன் வாளைச் சுழற்றியபடி பாய்ந்து வந்தான் கங்காளன்.

இவ்வளவையும் ஒரு மலை உச்சியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள் புவனா. உடல் நடுங்க இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டு விம்மும் பூங்குழலியை இழுத்து அணைத்துக் கொண்டாள். காதலனைக் கைவிடுவதா தந்தையைக் கைவிடுவதா என்ற தவிப்புக்கு ஆளாகியுள்ள அந்த அபலைப் பெண்ணிடம் புவனாவுக்கு இரக்கமும், பாசமும் பிறந்தது.

இதற்குள் கங்காளனின் வாளும் சத்தியனின் வாளும் மோதிக் 'கணீர் கணீர்' என்று ஒலி எழுப்பிக் கொண்டிருந்தன.


வைரம் பாய்ந்த வலுவான கரங்கள் கங்காளனுடையவை. சத்தியனும் சளைத்தவனல்ல. பராக்கிரமரிடம் பயிற்சி பெற்றவனல்லவா? கங்காளனின் பல கடுமையான தாக்குதலை அநாயாசமாகச் சமாளித்தான் சத்தியன். தனக்கு ஈடாகப் போராடும் சத்தியனிடம் முன்னைவிடப் பன்மடங்கு வெறுப்பும் கோபமும் கங்காளனுக்கு ஏற்பட்டன. மூச்சு வாங்க மூர்க்கமாகத் தாக்கினான். இந்த நிலையில் தனது சக்தியைப் பயன்படுத்திச் சத்தியன் பக்கம் வெற்றி கிடைக்க வழி செய்ய முடிவு செய்தாள் புவனா.

அப்போது திடீரென்று எங்கிருந்தோ போரிடும் அவ்விருவருக்கும் மேலாக, மாயமாகத் தோன்றினார் பராக்கிரமர். உண்மையை, நீதியை, தர்மத்தைக் காப்பதற்காக வானுலகத்தோர் அவருக்கு வழங்கியிருந்த வரப்பிரசாதம் அத்தகையதொரு சக்தி. அதைத் தக்க சமயத்தில் பயன்படுத்த அவர் தயங்கியதே இல்லை. பந்த பாசங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் நின்று செயலாற்றுகிறவரானபடியால் பராக்கிரமருக்குத் தேவர்கள் சில சக்திகளை வழங்கி இருந்தனர். அவைகளில் ஒன்றுதான் நினைத்த இடத்தில் நினைத்த சமயத்தில் மாயமாகத் தோன்றக் கூடியது.

கங்காளனும் சத்தியனும் வாளோடு வாள் மோதப் போரிட்டுக் கொண்டிருக்கும்போது அவர்களுக்கு மேலாக அந்தரத்திலே தோன்றியவரின் கையிலே நீண்டதோர் ஈட்டி இருந்தது. அதை அவ்விருவரின் வாள்களுக்கும் குறுக்கே நீட்டினார். அவரது ஈட்டி பட்டதும் சத்தியனின் வாள் படீர் என்று இரண்டாக உடைந்தது. அதே சமயம் செயலற்ற சத்தியனின் மார்பிலே கங்காளனின் உறுதி மிக்க வாள் பாய்ந்தது.

(தொடரும்)

தெரியுமா?



2060. பூமியிலிருந்து சந்திரன் உத்தேசமாக எவ்வளவு மைல்கள் தூரத்தில் உள்ளது?

2061. ஒளியின் பிரயாண வேகம் எவ்வளவு ?

2062. காடியில் உள்ள அமிலத்தின் பெயர் என்ன?

2063. குயில் தன் முட்டையைக் காக்கையின் கூட்டில் இடும் என்பார்கள். இதே மாதிரி மேல் நாட்டிலே ஒரு பறவை தன் முட்டைகளை வேறு பறவைகளின் கூட்டில் இடுகிறது. அதன் பெயர், என்ன?

2064. ஒட்டைச் சிவிங்கிகள் ஆப்பிரிக்காவில் எங்கு காணப்படுகின்றன?

2065. அடுத்த ஒலிம்பிக் பந்தயம் எந்த நாட்டில் நடைபெற விருக்கிறது தெரியுமா ?

2066. இங்கிலாந்திலிருந்து ஸ்காட்லாந்து எந்த மலைத் தொடரினால் பிரிக்கப்பட்டுள்ளது ?

2067. பிரிட்டிஷ் தீவுகளில் உள்ள மிகப் பெரிய சுத்த நீர் ஏரியின் பெயர் தெரியுமா ?

2068. அடிஸ் அபாபா என்பது எந்த ஆப்பிரிக்க நாட்டின் தலை நகர் ?

2069. இத்தாலிக்கும் சார்டினியாத் தீவுக்கும் இடையில் உள்ள கடலின் பெயர் என்ன?

2070. பிரான்ஸ் நாட்டின் புகழ் பெற்ற துறைமுகம் எந்தக் கடலில் உள்ளது ?

2071. டாரண்டோ, சிக்கியோ, பிரிண்டிஸி, கலாப்ரி - இவையெல்லாம் ஒரு நாட்டில் உள்ள நகரங்கள். அந்த நாடு எது ?

2072. ஏழு பக்கமுடைய ஓர் அமைப்பின் கணிதப் பெயர் என்ன?

2073. மழையின் அளவைக் கணக்கிடும் முறை கருவியின் விஞ்ஞானப் பெயர் தெரியுமா ?

2074. லிவர்பூல் நகரம் எந்த நதிக் கரையில் உள்ளது?

2075. காற்றின் வேகத்தைக் கணக்கிடப் பயன்படும் கருவியின் பெயர் என்ன?

2076. நெப்போலியன் ரஷ்யாவின் மீது படையெடுத்ததை நிலைக்களனாகக் கொண்டு டால்ஸ்டாய் ஒரு நாவல் எழுதினார். புகழ்பெற்ற அந்நாவலின்பெயர் என்ன தெரியுமா?

2077. ஆர்லே (Orley) என்பது ஐரோப்பாவின் ஒரு புகழ் மிக்க நாட்டின் தலைநகரில் உள்ள விமான நிலையத்தின் பெயர். அந்தத் தலைநகரின் பெயர் என்ன?

2078. இத்தாலி நாட்டின் மிக நீளமான நதியின் பெயரென்ன?

2079. ரோமானியர்கள் பிரிட்டனை எப்படிப் பெயரிட்டழைத்தார்கள்?

2080. வான்கோழிக்கு ஆங்கிலத்தில் டர்க்கி (Turkey) என்று பெயர். இதனால் இப்பறவையின் தாயகம் துருக்கியல்ல. அப்படியானால் இப்பறவை எந்த நாட்டைச் சேர்ந்தது?

2081. முட்டையின் வெள்ளைக் கருவுக்கு முறையான ரசாயனப் பெயர் என்ன?

2082. நீரிலும் நிலத்திலும் வாழக் கூடிய மிருகங்களுக்கு என்ன பெயர்?

தெரியுமே!



விடைகள்: 2060. உத்தேசமாக 2,38,866 மைல்கள். 2061. விநாடிக்கு 1,86,330 மைல்கள் உத்தேசமாக! 2062. அஸிடிக் அமிலம். 2063. கக்கூப் பறவை (Cuckoo Bird). 2064. ஆப்பிரிக்காவின் தெற்கு, மத்தியப் பகுதிகளில். 2065. கானடா நாட்டில் 1976ம் ஆண்டில். 2066. செவியோட்ஸ் (Cheviots) மலைத் தொடரினால். 2067. லோனே (Lough Neagh) ஏரி. 2068. எதியோபியாவின் 2069. டைர்ஹேனியன் கடல் (Tyerhenian Sea). 2070. மத்தியதரைக் கடலில். 2071. தெற்கு இத்தாலியில் உள்ளவை. 2072. ஹெப்டகன். 2073. ஆம்ப்ரோ மீடர் (Ombro meter) 2074. மெர்ஸே நதிக் கரையில். 2075. அனிமா மீடர். 2076. யுத்தமும் சமாதானமும் (War and Peace) என்பது. 2077. பாரிஸ் நகரம். 2078. போ நதி. 2079. அல்பியான் என்று. 2080. வட அமெரிக்காவைச் சேர்ந்தது. 2081. ஆல்புமென் (Albumen) 2082. ஆம்ஃபிபியன்கள் என்று பெயர்.

கோகுலத்தில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ம். வைத்தியநாதன் அச்சிட்டு சி. முராரியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்



ஆக்பா ஐஸோலி-II, நீங்கள் காத்திருந்து கையடையும் காமெரா. வெளிச்சமே இல்லையோ என்று நினைக்கத்தக்க இடத்திலும் படமெடுக்கக் கூடிய அளவுக்கு நுண்ணுணர்வு உள்ளது. 120 சைஸ் சுருள் பிலிமிலே பளிச்சென்ற 16 படங்களை எடுத்திட இதிலுள்ள நுட்பங்களைச் சிறப்புக்கள் பலப்பல. பாருங்கள் இதோ அச் சிறப்புக்களில் சில:

- அழகிய வடிவம்.
- சக்தி மிகுந்த ஆக்பா கலர்—ஆக்னர் f 5.6 லென்ஸ்.
- மூன்று ஷட்டர் வேக கதிகள்: B, 1/30 & 1/100.
- 5 அபெர்ச்சர் துளையமைப்புகள்: 5.6, 8, 11, 16 மற்றும் 22.
- யூனிவர்ஸல் ஃப்ளாஷ் காண்டேக்ட் பின்.

ஆக்பா ஐஸோலி-II பற்றி மேலும் விவரமறிய, அருகிலுள்ள ஆக்பா-கேவார்ட் விற்பனையாளரிடம் விசாரிக்கவும். மகிழ்ச்சியோடு அவர் இலவசமாக இயக்கிக் காட்டுவார்.



ஆக்பா ஐஸோலி-II

ஆக்பா-படமெடுப்பீர் ஆசைதீர!

AGI

ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்

SIMOES/AG/16C/75 TM